Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 131 குரோதி வருடம், மார்கழி மாதம் 08ஆம் திகதி திங்கட்கிழமை
(23.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 21, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12



## கமெண்ட் கந்தர்...

முஸ்லிம் அமைச்சர் ஒருவர நியமிக்கிறது நியாயம் தான்.. உள்ளூராட்சி தேர்தல் வருதெல்லே..



## உஷ்



பிரதியமைச்சர் முனீர் வெகு விரைவில் அமைச்சராக நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

அமைச்சரவையில் இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவம் இல்லாமை தொடர்பில் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் இந்த நியமனத்தை மேற்கொள்ள அரச மேல்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

# அரிசித் தட்டுப்பாடு தொடரும் நிலைமை!

## வரியை குறைக்குமாறு இறக்குமதியாளர்கள் மீண்டும் கோரிக்கை



கே.சுபானி


அரிசி இறக்குமதிக்காக ஒரு கிலோ அரிசிக்கு சுங்க அதிகாரசபையால் விதிக்கப்பட்டுள்ள 65 ரூபா வரியை குறைக்குமாறு அரசாங்கத்திடம் வர்த்தகர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். 02 பக்கம்

## சுயசரிதை நூலை எழுதுகிறார் ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது அரசியல் வாழ்க்கை தொடர்பான சுயசரிதையொன்றை எழுதும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

1973ஆம் ஆண்டு கம்பஹா மாவட்டத்தின் பியகம தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்தார்.

அதன் பின்னர் 1977ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக பாராளுமன்றத்தைப்... 02 பக்கம்






## கடன் தரப்படுத்தலில் சாதகமான முன்னிலை

### இலங்கை தொடர்பில் ஃபிட்ச் ரேட்டிங்ஸ் தகவல்

இலங்கை கடன் தரப்படுத்தலில் சாதகமான முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளதாக ஃபிட்ச் ரேட்டிங்ஸ் சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஃபிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனம் இலங்கையின் நீண்டகால சர்வதேச கடன் தரப்படுத்தலை உயர்த்தியுள்ளது.

இலங்கையின் நீண்டகால சர்வதேச கடன் தரப்படுத்தல் RD மட்டத்திலிருந்து CCC PLUS மட்டம் வரை உயர்த்தப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு கடன் தரப்படுத்தல் CCC MINUS மட்டத்திலிருந்து CCC PLUS மட்டம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

சர்வதேச கடன் மறுசீரமைப்பின் வெற்றியானது பேரினப் பொருளாதார குறிகாட்டிகளை மேம்படுத்தியுள்ளதுடன் உள்ளூர் நாணய இயல்புநிலை அபாயத்தைக் குறைத்துள்ளதாகவும் ஃபிட்ச் ரேட்டிங்ஸ்... 02 பக்கம்

## வைத்தியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை நீடிக்கப்பட்டது



விசேட வர்த்தமானி வெளியானது

» 02 பக்கம்

## டிஜிட்டல் அடையாள அட்டை திட்டம் விரைவில் ஆரம்பம்

### இந்தியாவின் முதலீட்டுடன் செயற்படும்

இலங்கையுடன் இணைந்து மக்களுக்கு அரசு சேவைகளை வழங்குவதை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் இந்தியா ஈடுபடவுள்ளது.

இதன் ஒரு கட்டமாகத் இலங்கை தனித்துவமான டிஜிட்டல் அடையாள திட்டத்தை செயற்படுத்தவுள்ளது.

அடுத்த மாதம், இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளதாக வெளியுறவு அமைச்சர்... 02 பக்கம்



## தேசத்தைக் கட்டியெழுப்புவதில் வலுவான அர்ப்பணிப்பு தேவை

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவிப்பு

‘‘ஒரு நாட்டின் மிகப் பெரிய பொக்கிஷம் அதன் குடிமக்கள், அவர்களைப் பாதுகாப்பதே உங்களின் முதல் மற்றும் முக்கிய கடமை. இந்தப் பொறுப்பு உங்கள் மனதில் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும். அவர்களின் உயிரைப் பாதுகாப்பது உங்கள் தலையாய கடமையாகும்’’-என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) தெரிவித்தார். எந்தவொரு சாதாரண கடமையையும் விட பெரிய... 02 பக்கம்



## - ஜனாதிபதி நிதிய பணம் வாரியிறைப்பு -

# 11 மாதங்களில் ரூ.300 கோடி செலவு

ஜனாதிபதி நிதியத்திலிருந்து கடந்த 11 மாதங்களில் 300 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் பொதுமக்களின் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகளுக்கு உதவியாக 58 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. 02 பக்கம்

ජනාධිපති අරමුදල
ஜனாதிபதி நிதியம்
President's Fund

## பிரபாகரனை வாழ்த்தியவர் தொடர்பில் சி.ஐ.டி. விசாரணை

வவுனியாவில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவரின் பிறந்தநாளுக்கு சமூக வலைத்தளத்தில் வாழ்த்து தெரிவித்தவரிடம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி.) விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தலைவரது பிறந்ததினத்தன்று சமூக வலைத்தளம் ஒன்றில் அவருடைய படத்தைப் பிரசுரித்து பிறந்தநாள் வாழ்த்து நபர் ஒருவரால் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த படத்துக்கு கீழ் அந்நபரின் சமூக வலைத்தளத்தின்... 02 பக்கம்






# அதிகரிக்கும் வீதி விபத்துச் சம்பவங்கள்; நாடளாவிய ரீதியில் இன்று முதல் சோதனை

நாட்டில் இடம்பெறும் விபத்துகளைக் கருத்திற்கொண்டு இன்று (23) முதல் பயணிகள் போக்குவரத்து பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்களை சோதனையிடும் விசேட நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக இடம்பெற்ற விபத்துகளை கருத்திற்கொண்டு, இவ்வாறான விபத்துகளை குறைப்பதற்காக பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய இந்த விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று (23) முதல் பண்டிகைக்காலம் முடியும்வரை, நாடளாவிய ரீதியில் நாடு முழுவதும் விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கை அமுல்படுத்தப்படவுள்ளது.

இங்கு, பொதுப் பயணிகள் பஸ்கள், அந்த பஸ்களின் ஓட்டுநர்கள் குடிபோதையில் அல்லது போதைப்பொருள் பாவித்துவிட்டு வாகனங்களை ஓட்டுகிறார்களா என்பதும் முக்கியமாக சோதனை செய்யப்படுகிறது.

மேலும், பஸ்ஸை கவனக்குறைவாகவும் அபாயகரமாகவும் ஓட்டுதல், அதிவேகத்தில் வாகனம் ஓட்டுதல், போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் ஓட்டுதல், பொருத்தமற்ற டயர் அல்லது பிற குறைபாடுகள் உள்ளதா என சோதனை செய்து, அந்த ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேசமயம், மற்ற வாகனங்களிலும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. அதற்காக, 24 மணிநேரமும் நாடு முழுவதும் போக்குவரத்து அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விசேட நடவடிக்கையின் போது, கவனக்குறைவாக அல்லது போக்குவரத்து விதிகளை மீறி இயங்கும் பஸ்கள் மற்றும் பிற வாகனங்கள் தொடர்பாக 119 மற்றும் 1997 ஆகிய துரித தொலைபேசி இலக்கங்களுக்கு பொதுமக்கள் தகவல் வழங்க முடியும்.

மேலும், சம்பந்தப்பட்ட பகுதியின் பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான அதிகாரியின் கையடக்கத் தொலைபேசி இலக்கம் அல்லது ஏனைய போக்குவரத்து பிரிவுகளுக்கு பொறுப்பான அதிகாரிகளின் கையடக்க தொலைபேசி இலக்கங்களுக்கும் தகவல்களை வழங்க முடியும்.

மேலும், போக்குவரத்து விதிகளை மீறுவது அல்லது பிற குற்றங்கள் தொடர்பான வீடியோக்கள் இருந்தால், அந்த வீடியோக்களை அந்த தொலைபேசி எண்களுக்கு வட்ஸ்அப் மூலம் அனுப்பவும் முடியும். மேலும் தகவல்களின்படி, இது தொடர்பான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

அந்தந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் தொலைபேசி எண்கள் கீழ்வருமாறு,

மாத்தறை - 0718591433
காலி - 0718591452
எல்பிட்டிய - 0718591472
தங்கல்ல - 0718591488
புத்தளம் - 0718591289
ஹலவதா - 0718591304
குளியாப்பிட்டிய - 0718591260
நிகவெரட்டிய 0718591274
குருநாகல் - 0718591244
கண்டி - 0718591042
தெல்தெனிய - 0718592274
மாத்தளை - 0718591079
கம்பளை - 0718591070
நுவரெலியா - 0718591094
ஹட்டன் - 0718591114
இரத்தினபுரி - 0718591382
கேகாலை - 0718591410
சீதாவாக்கபுர - 0718591423
எம்பிலிப்பிட்டிய - 0718591392
கந்தளாய் - 0718591187
அம்பாறை - 0718591145
மட்டக்களப்பு - 0718591127
திருகோணமலை - 0718591170
காங்கேசன்துறை - 0718591315
யாழ்ப்பாணம் - 0718591327
வவுனியா - 0718591340
மன்னார் - 0718591363
கிளிநொச்சி - 0718591347
முல்லைத்தீவு - 0718591374
மொனராகலை - 0718591533
பண்டாரவளை - 0718591520
பதுளை - 0718591508
கெப்பத்திகொல்லாவ - 0718592902
பொலன்னறுவை - 0718591230
அநுராதபுரம் - 0718591200
களுத்துறை - 0718591688
பாணந்துறை - 0718591674
களனி - 0718591589

பணிப்பாளர் - கொழும்பு மாநகர போக்குவரத்து பிரிவு - 071 8591741

பணிப்பாளர் - போக்குவரத்து தலைமையகம் - 071 8591967

பணிப்பாளர் - மேல் மாகாண வடக்கு போக்குவரத்து பிரிவு - 071 8592857

பணிப்பாளர் - மேல் மாகாண தெற்கு போக்குவரத்து பிரிவு - 071 8592278







*கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டுப் பிறப்பை வரவேற்கும் ஒளிவிழா கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் நேற்று (22) நடைபெற்றது. இந்நிகழ்வில், ஜா-எல பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் ஜெயப்பிரகாஷ் மற்றும் மருத்துவ கலாநிதி அருள் இராமலிங்கம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டனர்.*

## வைத்தியர்கள்...

வைத்தியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 வரை நீடித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச். அபயரத்னவின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வைத்தியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியது.

2023 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## கடன் தரப்படுத்தலில்...

சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு அமைய 08 திறைசேரி முறிகளின் ஊடாக சர்வதேச இறையாண்மை முறிகள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த அனைத்து முறிகளும் ஒதுக்கப்பட்ட 19,466.1 மில்லியன் ரூபாவை கொண்டுள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

## சுயசரிதை நூலை...

பிரதிநிதித்துவம் செய்தார். தற்போதைய இலங்கை அரசியல்வாதிகளில் 1970ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு அடுத்த மூத்த அரசியல்வாதியாக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார்.

கடந்த 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவி தவிர்ந்த பாராளுமன்றத்தின் ஏனைய அனைத்துப் பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

அத்துடன் இலங்கை பொருளாதார ரீதியாக வீழ்ச்சியுற்று, வங்குரோத்தடைந்திருந்த நிலையில் இந்நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று, மிகக் குறுகிய காலத்துக்குள்ளாக இலங்கையை பொருளாதார சரிவில் இருந்து மீட்டெடுத்த திறமையான அரசியல் தலைவராகவும் ரணில் விக்கிரமசிங்க பாராட்டப்படுகின்றார்.

ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தற்போதைக்கு சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார சொற்பொழிவாளராக அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் தனது கடந்த 50 வருடகால அரசியல் வாழ்க்கை குறித்த சுயசரிதையொன்றை எழுதும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளதாக அறியமுடிகிறது.

## பிரபாகரனை...

நட்பு வட்டத்தில் இருந்த சிலர் பிறந்தநாள் வாழ்த்துகளை சமூக வலைத்தளத்தில் பதிவு செய்திருந்தனர்.

இவ்வாறு பிறந்தநாள் வாழ்த்துகளை பதிவு செய்த வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரிடமே பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் வவுனியா அலுவலகத்தில் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்முறை வடக்கு, கிழக்கு பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரது பிறந்தநாள் மற்றும் மாவீரர் நாள் நிகழ்வுகள் அரசாங்கத்தின் கெடுபிடிகளற்று இடம்பெற்ற நிலையில், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்துக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி...

அதற்கு மேலதிகமாக க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிதியாக 32 கோடி ரூபாவும் மகாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக 16 கோடி ரூபாவும் இளம் பராயத்தினரின் நலனோம்புகைத் திட்டங்களுக்கு 15 கோடியும் பிக்குமார் கல்விக்காக மூன்று கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

**ஜனாதிபதி நிதியம்**

முன்னைய காலங்களில் ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகள் குறிப்பிட்ட சில துறைகளில் மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக்காலத்தில் ஆரம்ப வகுப்பு தொடக்கம் உயர்தரம் வரையான பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உள்ளிட்ட புதிய திட்டங்களின் மூலம் ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளார்.

அதன் ஊடாக கூடுதலான பொதுமக்கள் ஜனாதிபதி நிதியத்தின் மூலம் பயனடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## டிஜிட்டல்...

விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது, இந்தியா மேற்கொண்ட வெற்றிகரமான, மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையின் முயற்சிகளுக்கு உதவ இந்தியா தயாராக இருப்பதாகவும் இலங்கையில் டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை விரைவாக செயற்படுத்த ஒப்புக்கொண்டதாகவும் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் ஊழல் குறைவாக இருக்கும். அத்துடன் இது மில்லியன் கணக்கான மக்களுக்கு பயனளித்த இந்தியாவின் ஆதார் அட்டையைப் போன்றது என்றும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

**அடுத்த மாதம் இலங்கைக்கு வருகை**

இந்தியாவில் அரசுத் துறையின் மிகவும் வெற்றிகரமான டிஜிட்டல் மயமாக்கல் உலகளவில் பாராட்டைப் பெற்றுள்ளது என்றும் ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கீழ் வரும் டிஜிட்டல் பொருளாதார விவகார அமைச்சகமும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனமும் இந்திய அரசாங்கத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை செயற்படுத்தும்.

இது தொடர்பான முன்னெடுப்புகளை மேற்கொள்ள இந்திய அரசாங்கக் குழு அடுத்த மாதம் இலங்கைக்கு வருகை தர உள்ளது. இதன்படி, புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் ஆரம்பமாகும் முதல் இந்திய முதலீட்டுத் திட்டம் இதுவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரிசித்...

அரிசிக்கான வரி குறைக்கப்படுமாயின் சந்தையில் கட்டுப்பாட்டு விலையில் அரிசியைப் பெற்றுக்கொள்ள முடியுமென நுகர்வோர் அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

சுமார் 02 மாதங்களாகத் தொடரும் அரிசி நெருக்கடியை நிவர்த்தி செய்ய அதிகபட்ச மொத்த மற்றும் சில்லறை விலைகளை நிர்ணயித்தல், நுகர்வோர் அதிகாரசபையினரால் அரிசி ஆலைகளை சோதனைக்குட்படுத்தல் வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்திருந்தது.

அரிசி இறக்குமதிக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், டிசம்பர் 20 ஆம் திகதி வரையான (டிசம்பர் 04ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை) காலப்பகுதிக்குள் 67,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் பச்சை அரிசி 28,500 மெற்றிக் தொன் எனவும் எஞ்சிய 38,500 மெற்றிக் தொன் நாட்டரிசி எனவும் இலங்கை சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ அரிசிக்கு 65 ரூபா என்ற ரீதியில் 4.3 பில்லியன் ரூபா இறக்குமதி வரியாக சுங்கப்பிரிவு அறவிட்டுள்ளது.

''வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டநிலையில், நாட்டில் நிலவிவந்த அரிசிக்கான நெருக்கடி ஓரளவு குறைந்துள்ளபோதிலும், சில பிரதேசங்களில் இன்னும் போதியளவிலான அரிசி இல்லையெனத் தெரியவருகிறது.

இந்நிலையில், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியானது சந்தைக்கு வரும்போது விலை அதிகரிக்கும். கட்டுப்பாட்டு விலைக்கு அதனை விற்பனை செய்யமுடியாது. புறக்கோட்டையிலேயே வெள்ளைப் பச்சை அரிசி ஒரு கிலோ 215ரூபாவுக்கு விற்கப்படுகிறது. 25ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூர் அரிசியை அனுப்புவதாக தெரிவித்துள்ளனர்'' என சில்லறை விற்பனையாளரொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தம்மிடம் உள்ளூர் அரிசி கையிருப்பில் இருப்பதாகவும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இல்லையெனவும் நாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மற்றுமொரு வியாபாரி தெரிவிக்கையில்,

''எங்களிடம் உள்ளூர் அரிசி, நாட்டரிசி, கீரி சம்பா உள்ளிட்டவையே இருக்கின்றன. ஆனால், வெள்ளைப் பச்சையரிசி மற்றும் சிவப்பரிசி இல்லை. புத்தாண்டுக்கு பாற்சோறு இல்லை. சீனிச்சம்பலுடன் ரைஸ் சாப்பிடும் நிலை ஏற்பட்டுள்ளது" - என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அம்பாறை பரகஹகலே பகுதியில், நுகர்வோர் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் எனத் தெரிவித்து, சிறு அரிசி ஆலை உரிமையாளர்களிடம் பணம் பறிக்கும் மோசடியில் சிலர் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தேசத்தைக்...















பொறுப்பை நீங்கள் அனைவரும் சுமக்கிறீர்கள். உங்களின் முழுமையான அர்ப்பணிப்பு, தலைமைத்துவ திறன் மற்றும் சுய ஒழுக்கம் ஆகியவை எதிர்காலத்தில் தேசத்தின் முன்னேற்றத்துக்கு விலைமதிப்பற்றதாக இருக்கும். இந்த அரசு கடந்த செப்டெம்பர் பின்னர் நவம்பரில் இரண்டு பெரிய மக்கள் ஆணைகளைப் பெற்றது. அத்துடன் ஜனாதிபதியும் அரசாங்கமும் அனைத்து மட்டங்களிலும் சரியான அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

தியத்தலாவை இலங்கை இராணுவ கலாசாலையில் சனிக்கிழமை (21) நடைபெற்ற பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறும் இராணுவ கெடெட் அதிகாரிகளின் அணிவகுப்பின்போது புதிதாக அதிகாரம் பெற்ற அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும்போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், 222 கெடெட் அதிகாரிகள் இரண்டாவது லெப்டினன்ட்களாக இராணுவ அதிகாரம் பெற்றார்கள். புதிதாக அதிகாரம் பெற்ற அதிகாரிகளில், 203 ஆண் மற்றும் 19 பெண் கெடெட் அதிகாரிகள் உள்ளடங்குவர். மேலும் இதில் கென்யா, உகண்டா, காம்பியா மற்றும் செம்பியாவைச் சேர்ந்த 10 வெளிநாட்டு கெடெட் அதிகாரிகளும் உள்ளடங்குவர்.

அத்துடன், இந்திய தேசிய பாதுகாப்பு கலாசாலை மற்றும் அதிகாரிகள் பயிற்சி கலாசாலை அத்துடன் பங்களாதேஷ் இராணுவ கலாசாலை மற்றும் பாகிஸ்தான் இராணுவ கலாசாலை போன்ற புகழ்பெற்ற இராணுவ பயிற்சி கலாசாலைகளில் வெளிநாட்டு பயிற்சியை முடித்த பதின்மூன்று இலங்கை கெடெட் அதிகாரிகளுக்கும் இந்நிகழ்வின் போது அதிகாரம் அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா (ஓய்வு), இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் SLMA கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சில்வெஸ்டர் பெரேரா ஆகியோர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பாதுகாப்பு பிரதி அமைச்சரை அன்புடன் வரவேற்றனர். அதன் பின்னர் பிரதம அதிதி, உயிரிழந்த போர் வீரர்களை கௌரவிக்கும் முகமாக, SLMA போர்வீரர் நினைவு தூபியில் மலரஞ்சலி செலுத்தினார்.

புதிதாக அதிகாரம் பெற்ற அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய பாதுகாப்பு பிரதி அமைச்சர், ''பாதுகாப்பு அமைச்சராகவும் இருக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியின் சார்பாக போரை வென்ற இராணுவத்தில் இணைவதற்கான உங்கள் முடிவை நான் பாராட்ட விரும்புகிறேன். இன்று நீங்கள் பெற்ற அதிகாரம் ஒரு விலைமதிப்பற்ற சாதனை. சமாதான காலத்திலும் கூட இந்த குறிப்பிடத்தக்க தீர்மானத்துக்கு ஆதரவளித்த அவர்களின் பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

எமது நாடு பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் நேரத்தில் நீங்கள் இராணுவத்தில் இணைந்துள்ளீர்கள். 15 ஆண்டுகளுக்கு முன்பு பயங்கரவாதம் அழிக்கப்பட்ட போதிலும், நாம் எந்தவொரு நிகழ்வையும் எதிர்கொள்ளும் வகையில் பாதுகாப்பை நிலைநிறுத்துவது அவசியம்.



இராணுவப் பயிற்சியின் முக்கிய பங்கு மற்றும் புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மகத்தான பொறுப்பையும் அடிக்கோடிட்டுக் காட்டிய பிரதி அமைச்சர், நெருக்கடியான நிலைமைகளிலிருந்து நாட்டை விடுவிப்பதில் ஆயுதப்படைகளின் பங்களிப்பையும் பாராட்டினார். தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் வளர்ந்து வரும் உலகளாவிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அதிகாரிகளின் தயார்நிலையை வலியுறுத்தி, ஐ.நா.வின் கீழ் வெளிநாட்டுப் பாதுகாப்பு பணிகளில் சேவையாற்றும் இலங்கைப் படையினர் பல ஆண்டுகளாக சிறப்பாக செயற்படுவதையும் குறிப்பிட்டு கருத்துத் தெரிவித்தார்.

மேலும், இராணுவ கலாசாலையில் அவர்கள் பெற்ற அறிவு, பயிற்சி மற்றும் தேர்ச்சிபெற்ற அணுகுமுறை ஆகியவற்றின் மீது நம்பிக்கை தெரிவித்த அவர், இது இளம் அதிகாரிகள் தங்கள் தாய்நாட்டுக்கான உன்னத கடமையை மரியாதையுடனும் தனித்துவத்துடனும் நிறைவேற்ற உதவும் என்றார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) இலங்கை இராணுவ அகடமியின் சீன-இலங்கை நட்புறவு கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட கெடெட் அதிகாரிகளின் Final Presentation நிகழ்ச்சியிலும் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். "இலங்கை மற்றும் தெற்காசியாவுக்கு நாடு கடந்த குற்றங்களால் ஏற்படும் அச்சுறுத்தல்கள்: பாதுகாப்புப் படைகளின் பங்கு" என்ற தலைப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வு அமைச்சரின் பாராட்டுக்குட்பட்டது.

நாட்டின் மதிப்புமிக்க இராணுவக் கல்வி நிறுவனமான இலங்கை இராணுவ அகடமி, சிறந்த இராணுவத் தலைவர்களை உருவாக்குவதற்கு அயராது பங்களித்து வருகின்றது. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்த அதிகாரிகள், தேசத்தைக் கட்டியெழுப்பும் சவால்களை எதிர்கொள்ளவும் வளர்ந்து வரும் பாதுகாப்புத் தேவைகளை எதிர்கொள்ளவும் தங்கள் பயணத்தைத் தொடங்குவார்கள்" என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இராணுவ பிரதம அதிகாரி, வெளிநாட்டு தூதரக பாதுகாப்பு ஆலோசகர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் பெற்றோர் மற்றும் சிறப்பு அதிதிகள் உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.




# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மார்கழி மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்** நினைத்த காரியத்தில் வெற்றி, நோய், கடன் நிவர்த்தி, எதிரிகளை வெற்றி கொள்வீர்கள்.

**ரிஷபம்** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலத்தில் கவனம் வேண்டும்.

**மிதுனம்** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர் கள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

**கடகம்** உங்களுக்கென எதையாவது இன்று வாங்குவீர்கள். மனத் துணிவுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள்.

**சிம்மம்** குதர்க்கமான பேச்சுகள் வேண் டாம். பணம், பொருள் கைமாறும்போது கவனமாக செயற்படவும்.

**கன்னி** நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். தெளிந்த சிந்தனையுடன் சேவையாற்றுவீர்கள்.

**துலாம்** செலவுகளைக் கட்டுப்படுத்திக்கொள் ளவும். எதிர்பாராத உடல் நலக் குறைபாடுகளால் செலவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** தொழில், வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும். புகழ், செல்வாக்குடன் விளங்குவீர்கள்.

**தனுசு** புதிய முயற்சிகளில் வெற்றியும் இலாபங் களும் அமையும். யாரையும் நம்பி எதையும் ஒப்படைத்துச் செல்லாதீர்கள்.

**மகரம்** திட்டமிட்ட பிரயாணத்தால் நன்மையும் இலாபங்களும் உண்டு. எதற்கும்அவசரம் வேண்டாம். பொறுமையோடு இருங்கள்.

**கும்பம்** தொழில், வியாபாரத்தில் அதிக எரிச்சல், கோபம் அடைவீர்கள். எதற்கும் பொறுமை இழந்து விடாதீர்களை.

**மீனம்** காதல் திருமணம் கைகூடி வரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிக இலாபம் கிடைக்கும்.

**திதி:** அட்டமி பி.ப.5.08 வரை பின் நவமி
**நட்சத்திரம்:**உத்திரம் மு.ப.9.09 வரை பின் அஸ்தம்
**பிறை:** தேய்பிறை
**யோகம்:**சித்த யோகம் மு.ப.9.09 வரை பின் மரண யோகம்
**வார சூலை:**கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.
**நல்ல நேரம்:**காலை- 6.18 – 7.18 மணிவரை பகல்- 12.58 – 2.18 மணிவரை மாலை- 3.18 – 4.18 மணி வரை
**ராகு காலம்:**7.48 – 9.18 மணிவரை
**எமகண்டம் :**10.48 – 12.18 மணிவரை
**குளிகை :**1.48 – 3.18 மணிவரை
**சந்திராஷ்டமம்:**கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 9.09 மணிவரை**
பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம்,அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முற்பகல் 9.09 மணிக்குமேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்

## சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாக இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு





(நுவரெலியா நிருபர்)

ஹட்டன், டிக்கோயா கிளங்கன் வைத்திய சாலையை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்று அதன் நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டுமென நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் டிக்கோயா கிளங்கன் வைத்திய சாலைக்கு நேற்றைய தினம் (22) விஜயம் செய்து நேற்று முன்தினம்(21) ஹட்டன் பஸ் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிட்ட பின்பு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை மிகவும் விரைவாக செயற்பட்டு அவர்களின் உயிரைப் பாதுகாத்து தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளமை பாராட்டுக்குரியது. வைத்தியசாலையில் இடவசதி போதாமை ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. தற்பொழுது கிளங்கன் வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்களின் தொகையானது வெகுவாக அதிகரித்துள்ளது. அதற்கு காரணம் இந்தப் பகுதியில் இருக்கின்ற வைத்தியசாலைகளில் அதிக சேவையை முன்னெடுக்கின்ற ஒரு வைத்தியசாலையாக கிளங்கன் வைத்தியசாலை மாற்றமடைந்துள்ளது. எனவே, இதற்கான கட்டிட வசதிகளை அதிகரிக்க வேண்டிய தேவை தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

நான் மத்திய மாகாண அமைச்சராக இருந்த கால கட்டத்தில் இந்த வைத்தியசாலைக்குத் தேவையான பல்வேறு வேலைத்திட்டங்களை அன்றைய மாகாண சுகாதார அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுசென்று நிறைவேற்றியுள்ளேன். குறிப்பாக, ஒரே நேரத்தில் 40 தாதியர்களைப் பெற்றுக்கொடுத்துள்ளேன். மேலும் பல செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளேன்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையில் இந்த வைத்தியசாலையை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இந்த வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளை மிகவும் விரைவாக முன்னெடுக்க வேண்டுமாக இருந்தால் மத்திய அரசாங்கம் பொறுப்பேற்றால் மாத்திரமே அதனைச் செய்ய முடியும். எனவே, இது தொடர்பாக மிக விரைவில் சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸவுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பை வந்தடைந்த சீனக் கப்பல் 'பீஸ் ஆர்க்'





சீனக் கடற்படையின் மருத்துவமனைக் கப்பல் 'பீஸ் ஆர்க்' சம்பிரதாய பயணமாக கொழும்பை வந்தடைந்தது.

குறித்த கப்பல் நேற்று முன்தினம் (21) வருகை தந்ததுடன், இலங்கை கடற்படை மரபுகளுக்கமைவாக கடற்படையினரால் வரவேற்கப்பட்டது.

'பீஸ் ஆர்க்' என்பது 178 மீற்றர் நீளமுள்ள மருத்துவமனைக் கப்பல் என்பதுடன், இது கேப்டன் டெங் கியாங்கின் தலைமையில் 310 பணியாளர்களைக் கொண்டது.

உத்தியோகபூர்வ விஜயத்தின் ஒரு பகுதியாக, பீஸ் ஆர்க் என்ற மருத்துவமனைக் கப்பல் இலங்கையிலுள்ள சீன மக்கள் குடியரசின் தூதரகத்துடன் இணைந்து மருத்துவ சிகிச்சைகள் மற்றும் கிளினிக்குகளை கப்பலில் ஏற்பாடு செய்யும். அவை 'பீஸ் ஆர்க்' மற்றும் இலங்கை கடற்படை மருத்துவ திணைக்களத்தின் மருத்துவ பணியாளர்களால் நடத்தப்படும்.

கப்பலின் பணியாளர்கள் கொழும்பில் தங்கியிருக்கும்போது நாட்டின் சில சுற்றுலாத் தலங்களுக்கு செல்லவிருப்பதுடன், இரு கடற்படைகளுக்குமிடையிலான நட்புறவை மேலும் மேம்படுத்தும் நோக்கில் இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்படும் சில நிகழ்ச்சிகளிலும் அவர்கள் பங்கேற்பார்கள்.

உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு சீன கடற்படையின் மருத்துவமனைக் கப்பல் 'பீஸ் ஆர்க்' டிசம்பர் 28ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்படும்.

# கிளிநொச்சி வைத்தியசாலை நிர்வாகம் நோயாளர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சையளிக்கத் தவறுவதாக குற்றச்சாட்டு

(பு.கஜிந்தன்)

நோயாளர்களுக்கு கிளிநொச்சி வைத்தியசாலை நிர்வாகம் உரிய நேரத்தில் சிகிச்சையளிக்கத் தவறுகிறதா என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை தலையில் அடிபட்ட நிலையில் சிகிச்சைக்காக நோயாளர் ஒருவரை கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இரத்தம் வடிந்துகொண்டிருந்த நிலையில் நீண்ட நேரம் வரிசையில் காத்துக்கொண்டிருந்த குறித்த நோயாளிக்கு உடனடி சிகிச்சை வழங்க வைத்தியசாலை நிர்வாகம் தவறியுள்ளது. பின்னர் குறித்த நோயாளியை 4ஆம் விடுதியில் அனுமதிக்குமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

ஆனாலும், குறித்த விடுதிக்கு நோயாளியை அழைத்துச் செல்லத் தெரியாமல், நோயாளியை அழைத்துச் சென்ற நோயாளியின் உதவியாளர் தடுமாறியுள்ளார்.

இந்நிலையில், அங்கு நின்ற மக்கள் வைத்தியசாலை ஊழியர்கள் உதவியைப் பெறுமாறு கூறிய நிலையில், 4ஆம் விடுதிக்கு பெண் உதவியாளர்களை அழைத்துச் செல்ல முடியாதென வைத்தியசாலை ஊழியர்கள் கூறியுள்ளனர்.

நோயாளியொருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப் படும்போது, அந்த நோயாளியை உரிய இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு உதவியாளர் கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விடுதிகளில் பல்வேறு நோய்களுடன் சிகிச்சை பெற்று வரும் மக்களின் சுகாதாரப் பாதுகாப்புக் கருதி வெளியாட்களை உள்ளே அனுமதிப்பது குறைவாகும் என்பதுடன், குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரமே பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள்.

இந்நிலையில், குறித்த சம்பவம் வைத்தியசாலை ஊழியர்களின் செயற்பாடு தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

# சீன அரசியல் ஆலோசனை மாநாட்டின் தேசியக் குழு துணைத் தலைவி குயின் போயோங் – சபாநாயகர் சந்திப்பு





சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் (CPPCC) தேசியக் குழுவின் துணைத் தலைவி குயின் போயோங் சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்னவை பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

குயின் போயோங் தலைமையிலான தூதுக்குழுவினருக்கு சபாநாயகர் மதிய உணவு விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்திருந்ததுடன், இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான நீண்டகால நட்புறவுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் இது அமைந்திருந்தது. குறிப்பாக, பாராளுமன்ற ஒத்துழைப்பு, நிலைபேறான அபிவிருத்தி, வர்த்தகம், விவசாயம், தொழில்கள் மற்றும் பலதரப்பு ஈடுபாடுகள் போன்ற துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சபாநாயகர் வலியுறுத்தினார்.

இலங்கையில் உள்ள மாணவர்களுக்கு 2025ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகளை வழங்குவதற்கு சீன அரசாங்கம் ஆதரவளித்தமைக்கு தனது மனமார்ந்த நன்றியையும் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிர மரத்ன இச்சந்திப்பின்போது தெரிவித்தார். இரு நாடுகளுக்குமிடையிலான நீடித்த நட்புறவைக் கோடிட்டுக் காட்டும் வகையில், அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார சவால்களின்போது சீனா வழங்கிய குறிப்பிடத்தக்க உதவிகளை அவர் மேலும் பாராட்டினார்.

ஜகத் விக்கிரமரத்ன சபாநாயகராக நியமிக்கப்பட்டமை குறித்து குயின் போயோங் வாழ்த்துத் தெரிவித்தார். இலங்கையின் புதிய அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நோக்கங்களை அடைவதில் சீனாவின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார். மேலும், பரஸ்பர அபிவிருத்தி மற்றும் செழிப்பை மேம்படுத்துவதற்கு முக்கிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் சீனாவின் தயார் நிலையையும் அவர் வலியுறுத்தினார்.

பிரதி சபாநாயகர் வைத்திய கலாநிதி ரிஸ்வி சாலி, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

# மோட்டார் சைக்கிள் மீது இராணுவ ஜீப் மோதி விபத்து – ஒருவர் பலி



(எம்.ஏ.எம்.ஹசனார்)

வெல்லவாய - தனமல்வில பிரதான வீதியில் சோனியர் சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லவாய - தனமல்வில வீதியில் சோனியர் சந்தி பிரதேசத்தில் நேற்று முன்தினம் (21) மோட்டார் சைக்கிளில் பயணித்த 60 வயது மதிக்கத்தக்க ஒருவரை இராணுவ ஜீப் வாகனம் ஒன்று மோதியதில் படுகாயமடைந்த அவர், வெல்லவாய வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை தள வைத்தியசாலை அவசரப் பிரிவில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வெல்லவாய அதிலிவெல பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் என்பதுடன், இவ்விபத்துக்கு காரணமான இராணுவ சிப்பாயை பொலிஸார் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

மொனராகலை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கமைய இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை வெல்லவாய போக்குவரத்துப் பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு – தெல்தெனிய நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் விபத்து - 09 பேர் காயம்





(எம்.ஏ.அமீனுல்லா)

கொழும்பிலிருந்து கண்டி ஊடாக தெல்தெனிய நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் நேற்று முன்தினம் (21) பிற்பகல் 3.00 மணியளவில் கடுகண்ணாவ டாசன் கோபுரத்துக்கருகில் பெரிய மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் 09 பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த 09 பேரும் கடுகண்ணாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து 07 பேர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பஸ்ஸின் முன்பக்கத்தின் இடது பகுதி மரத்தில் மோதியதில், நடைபாதையில் இருந்த இருவர் பஸ்ஸுக்கும் மரத்துக்குமிடையில் சிக்கிக்கொண்டனர். அதன்பின்னர் பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து கிரேன் மூலம் அவர்களை மீட்டு, சுமார் 20 நிமிடங்களில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

நடைபாதை சோள வியாபாரியும் மற்றுமொருவருமே இவ்வாறு சிக்கியுள்ளதாகப் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பஸ்ஸின் முன்பக்க இடது டயரின் காற்றழுத்தம் குறைந்ததன் காரணமாகவே பஸ் தனது கட்டுப்பாட்டை மீறி மாமரத்தில் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படும் அதேவேளை, மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரியொருவர் பரிசோதித்து அறிக்கை வழங்கியதன் பின்னரே சம்பவம் குறித்த உண்மைத்தன்மையை புரிந்துகொள்ள முடியுமென கடுகண்ணாவ பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2024 டிசம்பர் 23ஆம் திகதி, திங்கட்கிழமை**

# தமிழர், முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படலாமா?

'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளமையை வரவேற்றுள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இவ்வாறான செயலணிகளில் இலங்கையின் பல்லினத் தன்மை உறுதிப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ள விடயம் எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியில் சிறுபான்மையின மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமையை சுட்டிக்காட்டி, ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகத்தினால் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள 18 பேர் அடங்கிய இக்குழுவில் சிறுபான்மை இன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாரும் உள்ளடக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள கோரிக்கையில் நியாயம் இல்லாமலில்லை. ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் இன்றுவரை மேற்கொள்ளும் உயர்மட்ட நியமனங்களில் புறக்கணிப்பொன்று இடம்பெறுவதை வெகுவாக உணர முடிகிறது.

அமைச்சரவை நியமனத்தின்போது இஸ்லாமியர் ஒருவர் அதில் இடம்பெறவில்லை. அது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் அக்குறணையில் மக்கள் கேள்வியெழுப்பியபோது, இன ரீதியான நியமனங்களை அரசாங்கம் கவனத்திற்கொள்ளவில்லையெனத் தெரிவித்திருந்தார். அதேசமயம், சபாநாயகர் அசோக ரன்வல பதவியை இராஜிநாமா செய்தபோது பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி சபாநாயகராகப் பதவியுயர்த்தப்படுவாரென எதிர்பார்க்கப்பட்டது. அது நடக்கவில்லை. இப்போது கிளீன் ஸ்ரீலங்கா செயலணியில் தமிழர்களோ இஸ்லாமியர்களோ இல்லை.

'Clean Srilanka' திட்டத்தை அமுல்படுத்துவதற்கான செயலணியை நிறுவி அதன் உறுப்பினர்களை நியமிப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பணிக்குழுவின் இலக்குகள் பின்வருமாறு,

***01. சமூக, கலாசார மற்றும் ஒழுக்கவியல் எழுச்சி மூலம் சமூகத்தை மிகவும் அபிவிருத்தியடைந்த நிலைமைக்கு உயர்த்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக 'Clean Sri Lanka' நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிடல், வழிநடத்தல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் உரிய கால எல்லையொன்றுக்குள் பூர்த்தி செய்தல்.***

***02. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் அமைப்பு கட்டமைப்பு ஒன்றைத் தயாரித்தல்.***

***03. 'Clean Sri Lanka' நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பில் அறிவுடைய அறிஞர்கள், தொழில்வாண்மையாளர்கள், விசேட நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளின் விடயம் சார்ந்த அறிவு மற்றும் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்.***

***04. அரச மற்றும் பகுதியளவு அரசதுறை, தனியார்துறை, ஆராய்ச்சி நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள், அரச சார்பற்ற அமைப்புகள், சர்வதேச அமைப்புகள் மற்றும் அபிவிருத்தித் தரப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் தொழில்சார் அமைப்புகள், சமூகம் மற்றும் மக்கள் அமைப்புகள், வெகுஜன ஊடக மற்றும் தொடர்பாடல் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், மத ரீதியான அமைப்புகள், தொழில்நுட்பம் வழங்குனர்கள் மற்றும் புத்தாக்குனர்கள், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தோர் போன்ற தரப்பினர்களை இந்நிகழ்ச்சித் திட்டத்துக்காக இணைத்துக்கொள்ளும் கட்டமைப்பொன்றைத் தயாரித்தல்.***

***05. 'Clean Sri Lanka' நிதியத்துக்கான நிதி வழங்குதல் மற்றும் தேவைக்கேற்றவாறு 'Clean Sri Lanka' நிதியத்தைப் பயன்படுத்துதல் தொடர்பில் ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குதல்.***

***06. இந்நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக அரச நிறுவனங்கள், தனியார் துறை, சர்வதேச அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புகள் போன்ற பல்வேறு தரப்பினர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை இனம் காணல் மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை 'Clean Sri Lanka' நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைத்தல்.***

***07 . இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பெறுபேறுகளின் நிலைபேறான தன்மையை உறுதிசெய்வதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை இனம் காணல், வகுத்தல் மற்றும் அத்தகைய சட்டங்களை நீண்டகாலத்துக்கு செயல்வலுப்படுத்தும் பொறுப்பை ஒப்படைக்கும் நிறுவன ரீதியான சட்டகமொன்றைத் ஸ்தாபித்தல்.***

***08 . நிகழ்ச்சித் திட்டத்தைத் திட்டமிடல், வழிநடத்தல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் நிலைபேறானதாகப் பேணிச் செல்வதற்காக டிஜிட்டல் மயப்படுத்தலைப் பயன்படுத்தல்.***

***09. அனைத்து தரப்பினர்களையும் சாத்தியமான முறையில் ஊக்குவித்தல் மற்றும் தொடர்புபடுத்துவதற்காக பல்வகை தொடர்பாடல் மூலோபாயம் ஒன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.***

- என்பன இதன் நோக்கங்களென ஜனாதிபதியின் விசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நோக்குகளை நிறைவேற்றும் தகுதிவாய்ந்த தமிழ், முஸ்லிம் சான்றோர்கள் ஒருவர் கூட இல்லையா என்று கேள்வி எழுகிறது.

கடந்த ஆட்சியில் கொரோனா உடல்கள் எரிக்கப்பட்டமை தொடர்பில் கடந்த பாராளுமன்றத்தில் விதிக்கப்பட்டதை இங்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது. அந்த விடயம் பாராளுமன்றப் பேச்சுகளுடன் வரையறை செய்யப்பட்டது.

அதனை அமைச்சரவையில் எடுத்துக்கூறி அந்த எரிப்பினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இல்லாத குறை அப்போது தெரிந்தது.

அதேபோல, தமிழ், முஸ்லிம்களை அரசாங்கம் புறக்கணிப்பதன் மூலம் அந்த ஒட்டுமொத்த சமூகங்களும் ஓரங்கட்டப்படுகின்றன என்பதை எத்திவைக்க விரும்புகிறோம்.

## இன்றைய நாளில்...

- **1947 – பெல் ஆய்வுகூடத்தில் முதலாவது டிரான்சிஸ்டர் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.**
- **1954 – முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.**
- **1972 – நிக்கராகுவா தலைநகர் மனாகுவாவில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்தனர்.**
- **1986 – எங்கும் தரையிறங்காமல் முதன்முதலில் உலகைச் சுற்றி வந்த வொயேஜர் விமானம், டிக் ரூட்டன், ஜீனா யேகர் ஆகிய விமானிகளுடன் கலிபோர்னியாவில் தரையிறங்கியது.**
- **1990 – 88% ஸ்லோவேனிய மக்கள் யூகொஸ்லாவியாவில் இருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.**
- **2007 – நேபாள இராச்சியம் கலைக்கப்பட்டு குடியரசாக மாறுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டது. பிரதமர் அரச தலைவரானார்.**

# குழந்தைகள் உலகம் மீளட்டும்!



அது அமெரிக்காவின் கடைவீதி. ஒருவர் பல்வேறு கடைகளுக்குள்ளும் நுழைகிறார். தாம் தேடும் பொருள் கிடைக்காத மனநிலையோடு அடுத்தடுத்த கடைகளுக்கும் செல்கிறார். அவரை எதிர்ப்படும் ஒருவர், என்ன பொருளை அவர் தேடுகிறார் என வினவுகிறார். ''குழந்தைகள் பயன்படுத்தும் டவல், மேஜை, நாற்காலி போன்ற பொருட்கள் கிடைக்குமா என்று தேடுகிறேன். அது எங்கும் கிடைப்பதாயில்லை'' என்று வருத்தத்துடன் பகிர்கிறார். பின்னர் கடையில் கிடைக்காவிட்டால் என்ன, தாமே தயாரித்து அறிமுகம் செய்வோம் என தமது முயற்சியைத் தொடங்குகிறார். அவர், நியூயோர்க் நகரின் கொலம்பியா பல்கலைக்கழகப் பேராசிரியரும் குழந்தை நிலையக் கல்வியாளருமான ஜான் டூயீ.

இன்றைக்கு நிலைமை மிகவும் மாறியுள்ளது. பெரிய உணவகங்களுக்குச் சென்றால் அங்கு சிறுவர்களுக்காக கைகளைக் கழுவும் இடம் உயரம் குறைவாகத் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. பெரிய பெரிய நூலகங்களில் சிறார்களுக்கென்று தனிப்பகுதிகள் அமைக்கப்படுகின்றன. பூங்காக்களில் கூட சிறார்கள் விளையாடுவதற்கான விளையாட்டுப் பொருட்கள் உள்ளன. இவையெல்லாம் ஆரோக்கியமான மாற்றங்கள்.

கடைகள் எங்கும் குழந்தைகளுக்கான பலவிதமான விளையாட்டுப்பொருட்கள் வெகுவாக கிடைக்கின்றன. மரம், பிளாஸ்ரிக் போன்றவற்றால் ஆனதாகவே இவை உள்ளன. பொதுவாக ஓரளவுக்கு உறுதித்தன்மை மிக்கதானதாக இவை இருப்பதால் பெரும்பாலும் விரும்பி வாங்கப்படுகின்றன. குறிப்பிட்ட வயது வரை மட்டுமே இப்படிப்பட்ட பொருட்களைக் கையாண்டு குழந்தைகள் விளையாடுவார்கள். அதன் பின்னர் அவர்களுக்கு அலுப்புத் தட்டிவிடும்.

மேலே பகிர்ந்த விவரங்களிலிருந்து இரண்டு விஷயங்கள் நமக்குத் தென்படும். ஒன்று, குழந்தையை மிகவும் போற்றி வளர்ப்பதுபோல் குழந்தைகளுக்கு எவ்வித இன்னல்களும் இல்லாமல் பார்த்துக் கொள்கிறோம். அவர்கள் விளையாடும் பொம்மைகள் அடங்கிய பை உள்ளிட்ட அவர்களது உடைமைகளை உடன் கொண்டு செல்கிறோம். மற்றொருவகை, குழந்தைகளை அவர்கள் போக்கில் வளரவிட்டுவிடுகிறோம். உண்மையில் குழந்தைகள் தமது குழந்தைமையை அனுபவிக்க அதிகளவிலான செல்வ வளத்துக்கான தேவை எதுவுமில்லை.

குழந்தைகள் ஒவ்வொரு கணத்தையும் தமது மகிழ்வைத் தாமே உண்டுபண்ண வல்லவர்கள். அவர்களுக்கு படைப்பாற்றல் மிகவும் அதிகம். எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்களுடைய ஆசைகள் இயல்பில் மிகவும் சிறியவை. பாதுகாப்பு அம்சங்களை உறுதிசெய்துவிட்டு அவர்களை அவர்கள் போக்கில் விட்டுவிட்டால் போதும், அவர்கள் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்று மகிழ்வார்கள்.

ஒரு காலத்தில் நமது கலாசாரம் குழந்தைகளுக்கான எளிய விளையாட்டுப் பொருட்களை அளவுக்கதிகமாகவே கொண்டிருந்ததென்பதை மறந்துவிடக் கூடாது. சில விளையாட்டுப் பொருட்களை இங்கே மீள நினைவூட்டுவோம். கிராமப்புறங்களில் விற்ற கிளி பொம்மை, வண்ண வண்ணக் காற்றாடிகள். சிறிய ஓலைத் துண்டில் ஒரு சப்பாத்தி முள்ளைக் குத்திக் கொடுத்தால் போதுமே என்ன அழகான விளையாட்டுப்பொருள் அது. சிறிய பிளாஸ்ரிக்குடன் இணைந்த இறப்பர் பந்தை தரையில் அடித்து விளையாடும் மகிழ்வை வேறு எது கொடுக்க இயலும்? விளையாட்டுத் துணைவர்கள் இல்லாமல் கூட நேரம் செலவாகுமே.

காகிதங்களைக் கொண்டே பல்வேறு பொம்மைகள், விளையாட்டுப் பொருட்களை செய்து விளையாடி மகிழ்ந்த காலம் ஒன்று உண்டு. காகிதத்தில் ஆகாய விமானம், தையல் இயந்திரம், புகைப்படக் கருவி, இன்னும் என்னதான் இல்லை? பலவற்றையும் செய்து மகிழ்ந்திருக்கிறோம். மழைகாலமாகிவிட்டால் கேட்கவே வேண்டாம். காகிதத்தில் கப்பல், கத்திக் கப்பல், ராஜா ராணி கப்பல் போன்றவற்றைச் செய்து தெருவில் செல்லும் வெள்ளத்தில் விட்டு மகிழ்ந்திருப்பார்கள்.

இப்படி நாம் சொல்லும்போது, இப்போதெல்லாம் எந்தக் குழந்தைகள் இந்த விளையாட்டெல்லாம் விளையாடுகிறார்கள்? எல்லோரும் கைபேசியில் அல்லவா விளையாடிப் பொழுதைச் செலவிடுகிறார்கள் என்ற வாதம் நிச்சயம் வரவே செய்யும். இந்தக் குழந்தைகளை கைபேசி விளையாட்டுகளில் புகுத்திவிட்டு பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

முற்காலங்களில் திருமணம், புதுமனை புகுவிழா போன்ற வீட்டு நிகழ்வுகளை கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம். அந்த நிகழ்விடங்களில் ஓடியாடி குழந்தைகள் அந்த இடத்தை உயிர்ப்பிப்பார்கள். ஆனால், இன்றைக்கு பெரியவர்களுக்கு இணையாக ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டு கைபேசியில் விளையாடும் குழந்தைகளைத்தான் காணமுடிகிறது.

எல்லா இடங்களிலும் பெரியோர்கள் போலவே குழந்தைகளும் அமர்ந்திருப்பதே ஒழுங்கு எனக் கற்பிக்கப்படுகிறது. இவ்வாறில்லாமல் குழந்தைகள் இயங்குவது அநாகரிகமாகப் பார்க்கப்படும் என்ற எண்ணத்தில் பெரும்பாலும் குழந்தைகளை நிகழ்வுகளுக்கு வெளியே அழைத்துச் செல்வதில்லை. அவ்வாறு அழைத்துச் சென்றாலும் இவ்வாறு கைபேசியைக் கொடுத்து ஆணி அடித்தது போல் அமர வைத்துவிடுகின்றனர்.

இன்றைக்கு இருக்கும் உலகம் பெரியவர்களுக்கு வசதியாக இருக்கிறது. ஆனால், குழந்தைகளுக்கு வசதியானதாக இல்லையென்று புலம்பினார் லியோ டோல்ஸ்டோய். ஆம், இன்றைக்கும் பெரியோர் உலகையே சிறிய வயதில் குழந்தைகளுக்குக் காட்டிக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்கான உலகம் பரந்தது; நெடியது; அழகானது. எளிய பொருட்களால் அந்த உலகம் நிரம்பினால் எளிமையும் வலிமையும் அவர்களிடம் நிறையும்.

**நன்றி - தினமணி**

# 31ஆவது FACETS Sri Lanka 2025 ஜனவரியில் ஆரம்பம்

இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA) - தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையுடன் (NGJA) இணைந்து ஏற்பாடு செய்துள்ள 31ஆவது FACETS இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியானது 2025 ஜனவரி 04 - 06 ஆம் திகதிகளுக்கிடையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

புதிய வருடத்தை ஆரம்பிக்கும் வகையில் உலகெங்கிலும் உள்ள முக்கிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள், பட்டை தீட்டுவோர் மற்றும் இரத்தினக்கல் சேகரிப்பாளர்களை ஒன்றிணைக்கின்ற தொழில்துறையில் மிகவும் எதிர்பார்க்கப்படும் நிகழ்வாக FACETS 2025 மாறியுள்ளது. 75க்கும் மேற்பட்ட வகையான வண்ண இரத்தினக் கற்களின் தாயகமாகவும் முதன்மையான இரத்தினக் கற்களின் மூலாதார நாடாகவும் உள்ள இலங்கையின் நீண்ட வரலாற்றின் ஓர் ஈர்ப்புமிக்க கொண்டாட்டமாக, பல வருடங்களாக இடம்பெற்று வரும் FACETS கண்காட்சி விளங்குகின்றது. உள்ளூர் ஆபரண வர்த்தகர்கள் மற்றும் வணிகர்களின் பங்கை முன்னிலைப்படுத்தும் இந்த நிகழ்வானது, செழுமையான பாரம்பரியம் மற்றும் புத்தாக்கமான நவீனத்துவத்தின் தனித்துவமான கலவையுடன் இலங்கையின் கைவினைத்திறனை உலகுக்கு வெளிப்படுத்துகிறது.



FACETS Sri Lanka 2025 கண்காட்சியானது இரத்தினபுரி, எலஹர, பேருவளை, எஹலியகொட, காலி, பெல்மதுளை, கஹவத்தை, கொழும்பு போன்ற இத்தொழில்துறையின் முக்கிய இடங்களைச் சேர்ந்த தொழில்முனைவோர்களுக்கு வாய்ப்பளிக்கவுள்ளது. இத்தொழில்துறையில் உள்ள தலைவர்களுக்கு உலகெங்கிலும் உள்ள தொழில் வல்லுநர்களுடன் இணைந்து இயங்குவதற்கும் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு தளமாக செயற்படுவதன் மூலம் ஏற்றுமதியில் ஒரு பில்லியன் டொலர்களை அடையும் இலக்கை நோக்கி இத்தொழில்துறையை இயக்குவதற்கு FACETS கண்காட்சி பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வு இலங்கையின் நீலமாணிக்கம் மற்றும் பல்வேறு வண்ணமயமான இரத்தினக் கற்களின் பெருமையை முன்னிலைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இலங்கையின் பன்முக கலாசாரம் மற்றும் பகிரப்பட்ட பாரம்பரியத்துக்கு ஒரு சாளரமாக செயற்படும். FACETS 2025 கண்காட்சியானது இரத்தினக்கல் மற்றும் ஆபரண மையமான இலங்கையின் நிலையை உறுதிப்படுத்தும் ஒரு களமாக அமையும் என்பதுடன், இரத்தினக்கல் மற்றும் சுற்றுலாத் தொழில்துறைகள் முழுவதும் புத்தாக்கத்தை ஏற்படுத்தும். அதேவேளை, சர்வதேச ஒத்துழைப்புக்கான வாய்ப்பையும் ஊக்குவிக்கும். இவ்வருட நிகழ்வானது பார்வையாளர்களிடையே ஒரு வலையமைப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பையும் கூட்டாண்மைக்கான ஒப்பிட முடியாத வாய்ப்புகளையும் வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. FACETS Sri Lanka 2025 கண்காட்சியின் முக்கிய நிகழ்வுகளில் Sapphire Night, முக்கிய அடையாளமான Ceylon Sapphire கொண்டாட்டம் மற்றும் தொழில்துறையில் உள்ள பெண் தலைவர்களை உற்சாகப்படுத்துவதற்கும் கொண்டாடுவதற்குமாக அர்ப்பணிக்கப்பட்ட Women's Power Breakfast போன்றவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி, மிகவும் பிரத்தியேகமான அனுபவத்தை வழங்கும் Mine Tour ஆனது, உள்நாட்டு சுரங்கங்கள் முதல் சந்தைப்படுத்துதல் வரையான நுண்ணறிவை வழங்கும். அத்துடன், கொழும்பு துறைமுக நகருக்கான (Port City) விஜயம் உள்ளிட்டனவும் இதன் அங்கமாக விளங்குகின்றன. அது மாத்திரமன்றி, VIP Golf Tournament போன்ற பிரத்தியேக நிகழ்வுகள் இந்நிகழ்வுக்கு மேலும் கௌரவத்தைச் சேர்க்கும். அதேவேளை, Story Corner, கடந்த வருடத்தின் Sustainability Pavilion இவ்வணிகம் கொண்டுள்ள பொறுப்பான நடைமுறைகள் மற்றும் தொழில்துறையை வடிவமைக்கின்ற சமூகத்தினர் பற்றிய ஆழமான வரலாற்றை வழங்கும்.

FACETS Sri Lanka கண்காட்சியானது அதன் 31ஆவது ஆண்டில் நுழையும் இவ்வேளையில், எதிர்வரவுள்ள கண்காட்சியானது பார்வையாளர்களுக்கு ஆழமான மற்றும் நுண்ணறிவுமிக்க அனுபவமாக அமையும் என்பது உறுதி. இலங்கைத் தொழில்துறையினரால் மிகவும் எதிர்பார்க்கப்படும் ஒரு நிகழ்வு எனும் வகையில் இலங்கையின் பொக்கிஷங்களின் அழகு, பன்முகத்தன்மை மற்றும் ஒப்பிடமுடியாத தரம் ஆகியவற்றைக் கொண்டாடுவதற்கும் அவற்றைக் கௌரவிப்பதற்கும் இந்த நிகழ்ச்சியில் உலகெங்கிலுமுள்ள பார்வையாளர்களை ஒன்று சேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்நிகழ்வு மற்றும் அதன் விசேட செயற்பாடுகள் பற்றிய மேலதிக தகவலுக்கு, www.facetssrilanka.com அல்லது Facebook மற்றும் Instagram தளங்களில் FACETS Sri Lanka எனும் பக்கத்தைப் பார்வையிடவும்.

இம்முறையும் சிறப்பான கண்காட்சியை சாத்தியமாக்கிய FACETS 2025 கண்காட்சியின் செயற்குழுவின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்காக அவர்களுக்கு நன்றி.

## நக்கல் நமசிவாயம்

***நாட்டில யானை, குரங்கு பயிர்ச்செய்கை பாதிப்பு என்ற பிரச்சினை பெரிசா ஓடுது... இவ்வளவு காலம் இந்தப் பிரச்சின இருக்கேல்லையா?***



# உலகில் முதன்முறையாக மூளை ஆரோக்கியத்தை மேம்படுத்த சிறப்புத் தேர்ச்சி பெற்ற 100 பேர் கொண்ட குழு நியமிப்பு

மூளையின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் உலகில் முதன்முறையாக 100 சிறப்புப் பயிற்சி பெற்ற வர்த்தக நாம தூதுவர்கள் (brand ambassador) குழுவொன்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் தன்னார்வ சேவைக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் அதனுடன் இணைந்த வைத்தியசாலையினால் தெரிவுசெய்யப்பட்ட 100 பேர் கொண்ட குழு விசேட பயிற்சியின் பின்னர் வர்த்தக நாம தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

"மூளை ஆரோக்கியத்துக்கான 10 தேவையான விஷயங்கள்" எனப்படும் மூளை ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான 10 முக்கிய விஷயங்களைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த வர்த்தக நாம தூதுவர்கள் பயன்படுத்தப்பட உள்ளனர்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமும் அதனுடன் இணைந்த வைத்தியசாலையும் இணைந்து இத்திட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளன.

எதிர்காலத்தில் "மூளை ஆரோக்கியத்துக்கான 10 தேவையான விஷயங்கள்" என்று அழைக்கப்படும் சுகாதார மேம்பாட்டு செயல்முறை ஆரோக்கியமான உணவு முறைகள், உடல் செயற்பாடு, ஒரு நல்ல குடிமகனாக இருப்பது மற்றும் நல்ல சமூக உறவுகளை உருவாக்குதல், உடல் எடை மற்றும் இடுப்பு சுற்றளவை நல்ல சரியான அளவில் வைத்திருத்தல், புகைபிடிப்பதைத் தவிர்த்தல், கொலஸ்ட்ரோல் அளவை நல்ல சரியான அளவில் வைத்திருத்தல், இரத்த சர்க்கரை மேலாண்மை, இரத்த அழுத்த மேலாண்மை, நேர்மறை மன மேலாண்மை மற்றும் ஆரோக்கியமான தூக்கம் ஆகியவை இதில் அடங்கும்.

உலக மக்கள் தொகையான 08 பில்லியனில் கிட்டத்தட்ட 04 பில்லியன் அதாவது 3.4 பில்லியன் பேர் தற்போது மூளை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை சுமார் 400 மூளை நோய்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. மூளையின் முக்கிய நோய்கள் பக்கவாதம், டிமென்ஷியா, ஒற்றைத் தலைவலி என்பன அதில் அடங்குகின்றன.

மேலும், சர்க்கரை நோயினால் ஏற்படும் புற நரம்பு பாதிப்பு, மனித வாழ்வை அதிகம் பாதிக்கும்



நோயாக கண்டறியப்பட்டு, மூளை நோய்கள் குறித்து முறையான விழிப்புணர்வு அளிப்பதன் மூலம், 90 சதவீதத்துக்கும் அதிகமான நோய்களை தடுக்க முடியும் என்பதும் தெரியவந்தது.

குளோபல் பேஷண்ட் அட்வகேசி கோலிஷன் (Global Patient Advocacy Coalition-GPAC) மற்றும் முன்னணி சர்வதேச நிறுவனங்கள் (Leading international organization) இந்தத் திட்டத்தில் பங்களிக்க உள்ளன.

# யானை – மனித மோதலில் அநுராதபுரத்தில் இவ்வருடத்தில் இதுவரை 31 பேர் உயிரிழப்பு

**(அநுராதபுரம் நிருபர்)**

காட்டு யானைகளின் தாக்குதலில் அநுராத புரம் மாவட்டத்தில் இதுவரையில் 31 பேர் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக் களத்தின் அநுராதபுரம் வலய அலுவலக தகவல் கள் மூலம் தெரியவந்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

2024ஆம் ஆண்டின் டிசம்பர் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் யானை - மனித மோதல் காரணமாக 31 பேர் உயிரிழந்துள்ளதுடன், அவர்களில் 26 ஆண்களும் 05 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை, யானை - மனித மோதல் காரணமாக 46 யானைகள் உயிரிழந்துள்ளமை மேலும் தெரியவந்துள்ளது.

காட்டு யானைகள் கிராமங்களை நோக்கி படையெடுப்பதை தடுக்கும் நோக்கில் சில பகுதிகளில் மின்வேலிகள் அமைக்கப் பட்டிருந்தாலும் அவை உரிய முறையில் பராமரிப்பு செய்யாத காரணங்களினால் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படு வதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

யானை - மனித மோதலை தடுப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்து மக்களின் உயிர்களை பாதுகாப்பதற்கு விரிவான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என அநுராதபுரம் மாவட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நோர்வே தூதுவர் பிரதமருடன் சந்திப்பு



பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் May-Elin Stener க்கும் இடையிலான சந்திப்பொன்று பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

வறுமை ஒழிப்பு, சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள், வரி சீர்திருத்தங்கள், மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் கல்வி முறைமையை மறுசீரமைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதமர், மிகவும் பயனுள்ள மற்றும் வினைத்திறனான அரச சேவைக்காக நிர்வாக முறையை டிஜிட்டல் மயமாக்குவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகள் குறித்தும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஷோபினி குணசேகர மற்றும் நோர்வே தூதரக அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஆபிரிக்க நத்தைகளைக் கட்டுப்படுத்தாவிடில் விரைவிலேயே பேராபத்துகள் விளையும்

## ஐங்கரநேசன் எச்சரிக்கை



**(பு.கஜிந்தன்)**

ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட பெரும் நத்தைகள் சமீபத்தில் பெய்த பெருமழையின் பின்னர் பல பகுதிகளில் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் ஏற்கனவே இங்கு அவதானிக்கப்பட்டபோதும் இப்போது இவற்றின் பெருக்கம் அதிகமாக உள்ளது. பயிர் பச்சைகளையெல்லாம் தின்றுதீர்க்கும் இவை, உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு, நோய்களைப் பரப்பும் காவிகளாகவும் செயற்படுகின்றன. இவற்றை இப்போதே கட்டுப்படுத்தத்தவறின் விரைவில் பேராபத்துகளை விளைவிப்பவையாக இவை அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

ஆபிரிக்க நத்தைகள் தொடர்பாக நேற்று (22) பொ. ஐங்கரநேசன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் (African Giant Snail- Lissachtina fulica) பிரித்தானியர் ஒருவரால் பின் விபரீதங்கள் புரியாமல் இலங்கைக்குள் எடுத்துவரப்பட்ட ஓர் அந்நிய இனம். ஒரு நத்தையிலேயே ஆண், பெண் இனப்பெருக்க அமைப்புகள் இரண்டும் இருப்பதால் இரண்டு நத்தைகள் சோடி சேரும்போது இரண்டுமே முட்டைகளை உருவாக்குகின்றன.

சராசரியாக 05 தொடங்கி 06ஆண்டுகள் வரை வாழுகின்ற ஒரு நத்தை தன் ஆயுளில் 1000க்கும் அதிகமான முட்டைகளை இடுகின்றது. அந்நிய இனமான இவற்றை இரையாக்க இலங்கையின் இயற்கைச் சூழலில் இரை கௌவிகள் எதுவும் இல்லை. இதனால் பல்கிப்பெருகி இப்போது ஓர் ஆக்கிரமிப்பு இனமாக உருவெடுத்துள்ளது.

உலகின் உயிர்ப் பல்வகைமையின் அழிவுக்கு அந்நிய ஊடுருவல் இனங்களும் ஒரு பெருங்காரணமாக உள்ளது. பகலில் மறைந்திருந்துவிட்டு இரவில் இரைதேடும் ஆபிரிக்க நத்தைகள் பயிர்கள், அலங்காரச் செடிகள், புல்பூண்டுகள் என்று எல்லாவற்றையும் தின்று தீர்த்து வருகின்றன. ஒரு தாவரத்தில் உள்ள நோய்க்கிருமிகளை இன்னொரு தாவரத்துக்குக் காவிச் செல்கின்றன.

இவற்றோடு மனிதர்களில் மூளைமென்சவ்வு அழற்சியை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிப் புழுக்களை இவை காவித்திரிவதும் அறியப்பட்டுள்ளது. ஆபிரிக்க நத்தைகள் பயிர்ச்செய்கைக்கும், உயிர்ப்பல்வகைமைக்கும் அச்சுறுத்தலாக இருப்பதால் இலங்கை அரசாங்கம் இதனை அந்நிய ஊடுருவல் இனமாக அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் திணைக்களங்களுக்காகக் காத்திராமல் பொது அமைப்புகளும் பொதுமக்களும் முன்வரவேண்டும். உப்பு நீர்க்கரைசல் உள்ள பாத்திரம் ஒன்றில் இவற்றை அமிழ்த்துவதன் மூலம் சுலபமாக அழிக்க முடியும். ஆபிரிக்க நத்தைகள் நோய்க்காவிகளாகவும் இருப்பதால் வெறும் கைகளால் நேரடியாகத் தொடாமல் இலைகள், கடதாசிகள் போன்றவற்றால் இவற்றைப் பிடிப்பதே பாதுகாப்பானது.

இதனை ஒரு சமூகக் கடமையாகக்கருதி நாம் விரைந்து செயற்படவில்லையெனில் ஏற்கனவே பாரிய பொருளாதாரச் சீரழிவுக்கும் சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கும் ஆளாகியிருக்கும் இலங்கை இந்நத்தையாலும் பெரும் சீரழிவுகளைச் சந்திக்க நேரும் என்றும் தெரிவித்துள்ளார்.

## வீதி விபத்துகளில் இவ்வருடத்தில் இதுவரை 2,243 பேர் உயிரிழப்பு

வீதி விபத்துகளில் 2024 ஜனவரி முதல் டிசம்பர் 13ஆம் திகதிவரை, 2,243 பேர் உயிரிழந்துள்ளதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த காலகட்டத்தில், மொத்தம் 22 ஆயிரத்து 967 சாலை விபத்துகள் பதிவுசெய்யப் பட்டுள்ளன. இதில் 2,141 விபத்துக்களில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதுடன், இது அனைத்து சம்பவங்களில் 9% ஆகும்.

மேலும், 6,500 பாரிய விபத்துகளும் 9,127 சிறு விபத்துகளும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் (21) நாட்டின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், 56 பேர் காயமடைந்துள்ளனர்.

ஹட்டன், மாரவில, அம்பலாந்தோட்டை, கம்பளை, ஹெட்டிபொல, மட்டக்களப்பு, மிரிஹான, கெபித்திகொல்லாவ மற்றும் சீதுவ ஆகிய பொலிஸ் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று (21) இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, ஹட்டன், மல்லியப்பு சந்தி பகுதியில் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், 46 பேர் காயமடைந் துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பத்தேகம மற்றும் பின்னதுவைக்கு இடை யில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், வேனும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் 06 பேர் காயமடைந்துள்ளனர்.

கடுகன்னாவையில் பஸ் ஒன்று மரத்தில் மோதியதில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

குறிப்பாக பண்டிகைக் காலங்களில் விபத்து களை குறைக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு சட்ட நடவடிக்கை

பொதுத் தேர்தலில் போட்டியிட்டு செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறிய வேட்பாளர்களின் பட்டியலை தேர்தல் ஆணைக்குழு பொலிஸுக்கு வழங்கவுள்ளது.

அதற்கேற்ப சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை சமர்ப்பித்த வேட்பாளர்களின் பெயர்கள் மாவட்ட செயலகங்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இரத்தான நியமனத்தை மீண்டும் வழங்க வேண்டும்

## வடமாகாண ஜனசவிய சுகாதார சேவைகள் சங்க செயலாளர் கோரிக்கை



**(பு.கஜிந்தன்)**

''நீண்டகாலமாக சுகாதாரத் தொண்டர்களாக வடமாகாணத்தில் கடமையாற்றிய 389 சுகாதாரத் தொண்டர்களுக்கு கடந்த 2018ஆம் ஆண்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு அரசியல் காரணங்களுக்காக மறுநாள் அரசாங்கத்தால் இரத்துச் செய்யப்பட்டது. அவர்களுக்கான நியமனத்தை ஜனாதிபதி வழங்கவேண்டும்'' என வடமாகாண ஜனசவிய சுகாதார சேவைகள் சங்கச் செயலாளர் முகுந்தன் புதிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சனிக்கிழமை அவர் வடமராட்சியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நீண்டகாலமாக தொண்டர்களாக பணியாற்றியவர்களுக்கு 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட நியமனம் அரசால் மறுநாளே நிறுத்தப்பட்டிருந்தது.

சிற்றூழியர்களுக்கான அந்நியமனத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வடமாகாணத்தில் கனிஷ்ட ஊழியர்கள் மிகவும் பற்றாக்குறையாக காணப்படுகின்றனர் என்றும் 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி, ஆளுநர் மற்றும் சுகாதார சேவைகள் அமைச்சருக்கும் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி கடிதம் அனுப்பியிருந்தோம்.

அதனடிப்படையில், 2019ஆம் ஆண்டு 389 பேருக்கு குறித்த நியமனம் வழங்கப்பட்டது. அதன்பின்பு அரசியல்வாதிகள் சிலரின் தலையீட்டால் 389 பேருக்கும் வழங்கப்பட்ட நியமனம் நிறுத்தப்பட்டது.

நிரந்தர நியமனம் கோரி நீதிமன்றம்வரை சென்றுள்ளோம். ஆனாலும் இதுவரை 389 பேருக்குமான நியமன ங்கள் மீள வழங்கப்படவில்லை. வடமாகாணத்தில் அதிகளவான சிற்றூழியர்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது. புதிய பிரிவுகளை நிறுவியுள்ளதால் அதற்கான ஆளனி பற்றாக்குறை நிலவி வருகின்றது. இருக்கின்ற ஆளணிகளும் ஓய்வில்லாது வேலை செல்வதால் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றை ஜனாதிபதி கருத்தில்கொண்டு வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட நியமனங்களை மீண்டும் வழங்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.







**மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கேகாலை மாவட்ட சாரணர் சங்கத்தினால் சாரணர் ஆசிரியர் பயிற்சி திட்டத்தின் முதல் கட்டம் அண்மையில் ஸாஹிரா கல்லூரியில் நடத்தப்பட்டது. இதில் மாவட்ட சாரணர் ஆணையர் டபிள்யூ.ஜீ.பி.பி.வல்பொல உட்பட கேகாலை மாவட்ட உதவி சாரணர் ஆணையர்கள் பங்களிப்போடு நடைபெற்றது. இதில் 15 சாரணர் ஆசிரியர்கள் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (மாவனல்லை செய்தியாளர்)**

# தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோரல்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச்சேவைக் குழுவின் அறிவித்தலுக்கு இணங்க, தேசிய பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்றதாக, இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I அதிகாரிகளிடம் இருந்து விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

அதற்காக சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ள அறிவித்தல், பாடசாலை பதிவேடு, புள்ளிவிபரம் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவங்களை 2024.12.11ஆம் திகதி அன்று கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், 2024.12.31ஆம் திகதி விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதியாகும்.

அதன்படி அந்த அறிவித்தல், பாடசாலை பதிவேடு, புள்ளி விபரம் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் என்பவற்றை கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் "விசேட அறிவித்தல்" எனும் பகுதியில் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# 14 பிரதேச செயலகப் பிரிவுகளின் சமூக பாதுகாப்பு அதிகாரிகள் மீளாய்வுக் கூட்டம்



**(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)**

ஸ்ரீலங்கா சமூக பாதுகாப்பு சபையின் களுத்துறை மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளின் சமூக பாதுகாப்பு அதிகாரிகள் கலந்துகொண்ட வருட இறுதி முன்னேற்ற மீளாய்வு கூட்டம் மாவட்ட செயலாளர் ஜனக குணவர்தன மற்றும் சபையின் தலைவர் எம்.கே.பீ.திசாநாயக்க தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான வருடாந்த இலக்கை அடைவது தொடர்பிலான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2025 ஜனவரி மாதம் 15 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

**எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது**

**தங்க கடன் பிரிவு**
**வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ**
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்

# பருத்தித்துறை - பொன்னாலை வீதியை புனரமைக்குமாறு வல்வெட்டித்துறையில் உண்ணாவிரதப் போராட்டம்




(பு.கஜிந்தன்)

யாழ். பருத்தித்துறை - பொன்னாலை வீதியை புனரமைக்கக் கோரி வல்வெட்டித் துறையில் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்துக்குப் பின்னர் 30 வருடங்களுக்கு மேலாக வல்வெட்டித்துறையிலிருந்து தொண்டைமானாறு வரையான 12.8 கிலோ மீற்றர் நீளமான வீதியை புனரமைக்கக்கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த போராட்டத்தில் அதிகளவான மக்கள் கலந்துகொண்டு தமது கையொப்பத்தை இட்டுச்செல்லும் நிலையில், ''எமது வீதி எமக்கானது. புதிய அரசே புது வீதி அமைத்துத் தா, ஓட்டுக்காக வீடு வந்தவரே வந்த வீதியை மறந்தது ஏன்?'' உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# புத்தளம் சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் சாந்த மரியா தேவாலயத்தில் நத்தார் விழா







(ரஸீன் ரஸ்மின்)

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் புத்தளம் மாவட்ட சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் புத்தளம் சாந்த மரியா தேவாலயத்தின் வளாகத்தில் நேற்று முன்தினம் (21) பகல் 2.00 மணியளவில் நத்தார் திருவிழா நடைபெற்றது. இதில் சர்வமதத் தலைவர்கள் கலந்துகொண்டு நத்தார் தொடர்பான கருத்துகளைத் தெரிவித்ததுடன் சாந்த மரியா அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது அறநெறி மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கைவிடப்பட்ட நிலையில் பெண் சிசுவொன்று மீட்பு

### தெமட்டகொடையில் சம்பவம்

தெமட்டகொட மேம்பாலத்துக்கு அருகில் புதிதாகப் பிறந்த குழந்தையொன்று கைவிடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

ஒரு துணியில் சுற்றப்பட்ட நிலையில் பெண் சிசுவொன்றே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டது.

அந்த வழியாக சென்ற ஒருவர் தெமட்டகொட பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, அதிகாரிகள் உடனடியாக குழந்தையை மீட்டதுடன், கொழும்பு ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு மாற்றியுள்ளனர். எவ்வாறாயினும், பரிசோதனையில் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டதாக வைத்தியசாலை நிர்வாகம் உறுதிசெய்தது.

நல்ல உடல் நிலையுடன் காணப்பட்ட குழந்தை, கைவிடப்படுவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் பிறந்துள்ளதாக வைத்திய பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது. குறித்த கைவிடப்பட்ட குழந்தையின் பெற்றோர் குறித்து பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மியன்மார் ரோஹிங்யா அகதிகளை பார்வையிட்டார் ரிஷாத் எம்.பி.





மியன்மாரிலிருந்து படகில் பயணித்த சுமார் 115க்கும் மேற்பட்டவர்களுடன் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரைப் பகுதியில் கடந்த வாரம் படகு கரையொதுங்கியதையடுத்து அவர்கள் திருகோணமலை அஷ்ரப் இறங்குதுறைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர் திருகோணமலை ஜமாலியா பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மியன்மார் அகதிகளை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், பராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் ஆகியோர் நேற்று முன்தினம் (21) திருகோணமலை, ஜமாலியா பாடசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

அடிப்படை வசதிகள் கூட இல்லாமலுள்ள மியன்மார், ரோஹிங்யா அகதி மக்களைச் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்துகொண்ட ரிஷாத் எம்.பி. அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழங்கிவைத்தார்.

மேலும், அரசாங்கத்தினூடாக இவர்களுக்கு முன்னெடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்து பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் ஐ.நா. சபையூடாக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.


இவ்விஜயத்தின்போது திருகோணமலை மாவட்ட மக்கள் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தர்களான டாக்டர் ஹில்மி முகைடீன், டாக்டர் ஹில்மி மஹ்ரூப் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களும் உடனிருந்தனர்.

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கொழும்பு தாமரைக் கோபுரத்தை பார்வையிடும் நேரம் நீடிப்பு

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கொழும்பு தாமரைக் கோபுரத்தைப் பார்வையிடுவதற்கான நேரத்தை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தாமரைக் கோபுரம் டிசம்பர் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் நள்ளிரவு வரை பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படும் எனவும் டிசம்பர் 27ஆம் திகதி காலை 9 மணிமுதல் இரவு 11 மணிவரை செயற்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், டிசம்பர் 31 மற்றும் ஜனவரி முதலாம் திகதியன்று காலை 9 மணிமுதல் ஜனவரி 2ஆம் திகதி மதியம் ஒரு மணிவரை திறந்திருக்கும்.







கனடா நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுடன் ஒட்டோவா நகரில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த மக்கள் சந்திப்பு.

# இலக்கிய ஊடக ஆளுமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு























(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

தினகரன், தினமின, டெய்லி நியுஸ் மற்றும் காவேரிக் கலா மன்றம் என்பன இணைந்து நடத்திய இலக்கிய ஊடக ஆளுமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (21) லேக் ஹவுஸ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திருமதி சாவித்திரி போல்ராஜும் சிறப்பு விருந்தினராக தேசிய ஒருமைப்பாடுகள் மற்றும் தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

வரவேற்புரையை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரும் அறிமுக உரையை பேராசிரியர் துரை மனோகரனும் வழங்கியதுடன் அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன.

இதன்போது தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு உரையை வைத்தியர் டிலினி விஜயசேகர வழங்கியதுடன் காவேரிக் கலா மன்றம் தொடர்பான உரையை அதன் திட்டப் பணிப்பாளர் ஐ.சஹானாவும் அலியன்ஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் ரகு பாலச்சந்திரனும் வழங்கினர்.

நிகழ்வில், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஆசிரியர் பீடப் பணிப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான சிசிர யாப்பா, நிறுவனத்தின் பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல, ஹாசிம் உமர் பவுண்டேஷனின் ஸ்தாபகர் ஹாசிம் உமர் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது இலக்கிய ஊடக ஆளுமைகளுக்கு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள், பொற்கிளி என்பன வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் அதிதிகளுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நோன்பு காலத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையை நடத்துவது அசௌகரியமானது

## அரசும் முஸ்லிம் எம்.பிக்களும் கவனம் செலுத்த வேண்டும்

## அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா கோரிக்கை

**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

மார்ச் மாத நடுப்பகுதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்திருக்கும் வேளையானது முஸ்லிம்களின் புனித நோன்பு காலமாக அமைந்துள்ளது. அதனால் இப்பரீட்சையை நோன்பு ஆரம்பிக்க முன்னர் அல்லது நோன்புப் பெருநாள் முடிந்த பின்னர் நடத்த அரசாங்கம் முன்வரவேண்டும் - என அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா ஜனாதிபதி, பிரதமர், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், பரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றுக்கு கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

அல்- மீஸான் பௌண்டேஷனின் கோரிக்கைக் கடிதத்தில் மேலும், உலகில் வாழும் இஸ்லாமியர்களின் புனிதமிகு மாதங்களில் ஒன்றான புனித ரமழான் என்பது அமல்கள் நிறைந்த மாதமாகும். இந்த மாதத்தில் 13 மணித்தியாலங்களுக்கு மேலாக பகல் நேரங்களில் முஸ்லிம்கள் நோன்பு நோற்றிருப்பதுடன் பகலிலும் இரவிலும் இறைவனை அதிகம் தொழும் மாதமாகும். அருட்கொடைகள் நிறைந்த இந்த மாதத்தில் முஸ்லிம்கள் நிறைய நன்மையான காரியங்களைச் செய்வதுடன் இரவு நேரத்திலும் நீண்ட நேரம் நின்று தொழும் காலமாகும்.

இந்தக் காலத்தில் பள்ளிவாசல்கள் சகலதிலும் மார்க்கச் சொற்பொழிவுகள் மற்றும் வணக்க வழிபாடுகளில் முஸ்லிம்கள் ஈடுபடுவார்கள். இப்படியான சங்கை மிகுந்த காலத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்திருப்பது பொருத்தமற்ற செயலாக அமைந்துள்ளது என்ற விடயம் இப்போது முஸ்லிம்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியிருக்கிறது.

பரீட்சை எழுதும் முஸ்லிம் மாணவர்களும் பரீட்சைக் கடமைக்குச் செல்லும் முஸ்லிம் உத்தியோகத்தர்களும் நோன்பு காலங்களில் பரீட்சையை எதிர்கொள்வதும் பரீட்சைக்குத் தயாராவதும் உடலியல் ரீதியாக மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும் மார்க்கக் கடமைகளிலும் தாக்கஞ்செலுத்த வாய்ப்புள்ளது.

இதனால் இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிம்களின் உணர்வுகளை மதித்து இலங்கை முஸ்லிம்களின் மார்க்கக் கடமைகளையும் கல்வி நடவடிக்கைகளையும் திருப்திகரமாக முன்னெடுக்க இந்தப் பரீட்சை நேரசூசியில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கமும் குறித்த துறைக்குப் பொறுப்பான திணைக்களங்களும் முன்வரவேண்டுமென்பதுடன் முஸ்லிம் கட்சிகள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் கரிசனை செலுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலில் இரத்ததான முகாம்



**(அட்டப்பள்ளம் செய்தியாளர்)**

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் தஃவா குழு இணைந்து நடத்திய மாபெரும் இரத்ததான முகாம் சனிக்கிழமை(21) பள்ளிவாசல் தலைவர் ஏ.எம்.இப்றாஹீம் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக தெற்குப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.எவ்.ஸஹ்றா ஸறாப்டீன், கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.றம்ஸீன் பக்கீர், அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி வித்யா, கல்முனை 09ஆம் பிரிவு கிராம சேவகர் எம்.ஏ.றஹ்னா, வைத்திய அதிகாரி டாக்டர் சுபோதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



இரத்ததான முகாமில் சுமார் 115 குருதிக் கொடையாளர்கள் ஆண்கள், பெண்கள் என கலந்துகொண்டு இரத்ததானம் செய்திருந்தனர். இந்நிகழ்வில் கல்முனை ஹுதா பள்ளிவாசல் செயலாளர் ஏ.பி.எம்.தன்ஸீல், உப தலைவர் எஸ்.எச்.நிஹார் ஆகியோர் உட்பட தஃவா குழுத் தலைவர் மௌலவி ஏ.எம்.சாபித் ரியாதி மற்றும் தஃவா குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோட்டார் சைக்கிள் மோதி இளைஞன் பலி

**(வீரமுனை செய்தியாளர்)**

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமாங்கேஸ்வரர் ஆலய பிரதான வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த இளைஞன் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சனிக்கிழமை (21) மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் மாமாங்கம் பாடசாலை வீதியைச் சேர்ந்த 26 வயதான ரஞ்சித் விசிதன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கூழாவடி, மாமாங்கேஸ்வரர் ஆலய வீதியில் உள்ள ஒப்பந்தக்காரர் ஒருவர் அவரது வாகனங்களை வீதியில் நிறுத்திவைத்திருந்த நிலையிலேயே இந்த விபத்து ஏற்பட்டதென மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.



குறித்த வீதியில் வாகனங்கள் நிறுத்திவைக்கப்படுவது குறித்து கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினரதும் கவனத்துக்கு கொண்டுசென்றபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



*திருகோணமலை கடற்கரையை வந்தடைந்த மியான்மார் நாட்டு அகதிகளுக்கு திருகோணமலை மாவட்டப் பெண்கள் வலையமைப்பினால் தேவையான அத்தியாவசிய உலருணவுப் பொதிகளோடு பகல் உணவும் வழங்கப்பட்டது. (சீனக்குடா செய்தியாளர்)*

# நிவாரணம் வழங்கி அரசியல் செய்யமுடியும் என்ற கலாசாரத்தை தொடர்ந்தும் செய்ய வேண்டாம்

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா

**(சீனக்குடா செய்தியாளர்)**

இந்த அரசியல்வாதிகளை மக்கள் இரு தடவைகள் இனங்காட்டி விட்டார்கள். இனியும் ஏமாற வேண்டாம். எனவே, நிவாரணங்களையும் பொதிகளையும் வழங்கி இனியும் அரசியல் செய்ய முடியுமென்ற நப்பாசையை அவர்கள் இனியாவது கைவிட வேண்டும். திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த ரோஹிங்ய பிரஜைகளுக்கு அரசாங்கம் எந்த அடிப்படை வசதிகளையும் செய்யவில்லை என சில அரசியல்வாதிகள் சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பதிவேற்றியிருந்தனர் என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அகதிகள் தங்கியிருக்கின்ற திருகோணமலை, ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இவர்கள் சட்டவிரோத குடிவரவாளர்கள். எனினும், நாங்கள் மனிதாபிமான முறையில் இவர்களை ஏற்றுக்கொண்டுள்ளோம். அத்தோடு, இவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொண்டு வருகின்றோம். இவர்களுடைய பிரச்சினை உள்ளூர் மற்றும் சர்வதேச சட்டங்கள் மற்றும் நிர்வாக ரீதியான பிரச்சினையாகும். இவற்றை அரசாங்கம் மிகச் சிறப்பாக அணுகி வருகின்றது என்பதை குற்றஞ்சுமத்துபவர்களுக்கு சொல்லி வைக்க விரும்புகிறேன்.



உணவு, உடை, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் கச்சிதமாகச் செய்துகொண்டு வருகின்றோம். துறைமுகத்தில் வைத்தே நடமாடும் சுகாதார முகாம் அமைத்து அவர்களுடைய உடல் நிலையில் கவனஞ்செலுத்தப்பட்டது. சுகாதாரத் துறையினர், பாதுகாப்புப் பிரிவினர், வெளிவிவகார அமைச்சு மற்றும் பல்வேறு தரப்பட்ட துறைகள் ஒன்றாகச் சேர்ந்து அகதிகள் விடயத்தைக் கையாளுவதற்கு இயங்கிக்கொண்டிருக்கின்றோம்.

சட்டத்தின் பிரகாரம் தற்போது இடைத்தங்கல் முகாமில் மியன்மாரின் 103 பிரஜைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்நேரத்தில், அகதிகளை வைத்து தமது சுய அரசியல் இலாபத்துக்காக சில அரசியல்வாதிகள் இயங்கி வருவதையும் அவதானித்து வருகின்றோம். இவற்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு பாரிய விடயத்தை மேற்கொண்டு வரும் சூழ்நிலையில் ஒரு சில குறைபாடுகள் எழலாம். நாட்டைப் பொறுத்தவரை இது ஒரு புதிய அனுபவம். எனினும், அரசாங்கம் இந்த விடயத்தை அணுகுவதற்கான திறமையையும் ஆற்றலையும் கொண்டிருக்கின்றது. அரசியல்வாதிகள் உதவி செய்ய வேண்டுமாக இருந்தால் நீங்கள், அதனை அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாகச் செய்ய முடியும். அரசியல் செய்கின்ற சூழல் இதுவல்ல. எந்த வேறுபாடுகளுமின்றி மனிதாபிமான அடிப்படையிலேயே அகதிகளுடைய விடயங்கள் கையாளப்படுகின்றன. அரசியலில் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களும் தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வந்தவர்களும் பொய்யான குற்றச்சாட்டுகளை இந்த விடயத்தில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அகதிகள் நாளை அல்லது நாளை மறுதினம் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். அதன் பிறகு இவர்களின் விவகாரம் தொடர்பாக, அந்தத் திணைக்களத்தினால் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# பணிப்பெண்ணாக வெளிநாடு சென்ற முனைக்காடு பகுதி பெண்ணை மீட்டுத்தருமாறு குடும்பத்தினர் கோரிக்கை

## ஒரு வருட காலமாக தொடர்புகளின்றி இருப்பதாகவும் தகவல்





(குருக்கள்மடம் செய்தியாளர்)

2022ஆம் ஆண்டு பணிப்பெண்ணாக ஓமான் நாட்டுக்குச் சென்ற முனைக்காடு பகுதியைச் சேர்ந்த இராசலிங்கம் யசோமலர் என்பவர் கடந்த ஒரு வருடமாக குடும்பத்தினருடன் எதுவித தொடர்புகளுமில்லாமல் இருப்பதாகவும் அவரை உரிய முறையில் மீட்டுத் தருமாறும் அவரது குடும்பத்தினர் வேண்டுகோள் விடுகின்றனர்.

குடும்பத்தின் கஷ்ட நிலைமையைக் கருத்திற்கொண்டு பணிப்பெண்ணாக ஓமான் நாட்டுக்கு கடந்த 2022ஆம் ஆண்டு முகவரொருவர் மூலம் சென்றதாகவும் அங்கு சென்று இரண்டு மாதங்கள் வேலையெதுவும் இல்லாதிருந்ததாகவும் பின்னர் பணிப்பெண்ணாக ஒரு வீட்டில் நியமிக்கப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை தொலைபேசி அழைப்பின் மூலம் தொடர்புகொண்டதாகவும் பின்னர் அந்தத் தொலைபேசித் தொடர்பானது ஐந்து நாட்களுக்கு ஒருதடவை இடம்பெற்றதாகவும் சகோதரிகள் தெரிவித்ததுடன் 2023ஆம் ஆண்டு மாதாந்தம் ஒரு இலட்சம் தொடக்கம் 75 ஆயிரம் ரூபாவரை தொடர்ச்சியாக கடந்த வருடம் டிசம்பர் மாதம்வரை பணம் அனுப்பியதாகவும் குறித்த பெண்ணின் சகோதரிகள் தெரிவித்தனர்.

அத்தோடு, குறித்த பெண்ணின் தொலைபேசியை அவர் பணிபுரியும் வீட்டார் அபகரித்து வைத்துள்ளதாகவும் 05 நாட்களுக்கு ஒரு தடவை மாத்திரம் குடும்பத்தாரிடம் கதைப்பதற்கு வழங்குவதாகவும் குறித்த பெண்ணின் சகோதரர்கள் தெரிவித்ததுடன், கடந்த 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி தொடர்பு கொண்டதன் பின்னர் ஒரு வருடம் கடந்தும் என்ன நடந்ததென்று தெரியாமலும் தொடர்பு கொள்வதற்கான வழிகளும் இல்லாமல் அவதியுறுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண்ணான அதாவது, வெளிநாடு சென்ற எமது அக்காவுக்கு கணவர்,15 வயதில் ஒரு பெண்பிள்ளை, 11 வயது மற்றும் 04 வயதுடைய இரு ஆண் பிள்ளைகளும் உள்ளார்கள். தற்போது அவர்கள் அனைவரும் அவர்களது தாயுடன் கதைப்பதற்கு ஆசையாக உள்ளார்கள். அந்தப் பிள்ளைகள் மூவரும் அவரது தாய் மற்றும் சகோதரிகளின் அரவணைப்பிலேயே வாழ்கின்றனர். குறித்த பெண்ணை நாட்டுக்கு மீளக்கொண்டுவருவதற்கான பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தும் கூட தங்களால் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியவில்லையென உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குறித்த பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்பிய முகவரிடம் தொடர்புகளை மேற்கொண்டபோதும் அவர்களுக்கு அவ்விடயம் தொடர்பாக எதுவும் தெரியாது எனவும் சற்று வேலையாக இருப்பதாகவும் இப்பொழுது கதைக்க முடியாது எனவும் அலட்சியமாகப் பேசுகின்றார்.

பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் செல்லாது போலி ஆவணங்களைக் கொண்டே இந்தப் பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளனர். குறித்த பெண்ணை மீட்டெடுப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிழக்கு மாகாண அலுவலகத்தில் சென்று விசாரித்தபோதும் இவர் உரிய முறையில் செல்லவில்லையென்பது தெரியவருகிறது. குறித்த பெண்ணின் கடவுச்சீட்டு இலக்கத்தை வழங்கினால் மாத்திரமே தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனத் தெரிவித்ததாக சகோதரிகள் தெரிவித்தனர்.

இப்பெண்ணின் கணவர் வேலைக்குச் செல்லாது வீட்டில் இருந்ததாகவும் இதனால் பிள்ளைகளின் கல்வி, உணவு விடயங்களில் சிரமத்தை எதிர்நோக்கியதன் விளைவாகவே குறித்த பெண் வெளிநாடு செல்ல முயற்சித்ததாகவும் தெரிவிக்கப்பட்டதுடன் அப்பெண்ணை மீட்டுத் தருமாறும் அவரது குடும்பத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வெள்ளத்தால் பாதிப்புற்ற வீதிகளை செப்பனிடும் பணி ஆரம்பம்





(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புற்ற வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதான வீதிகளைப் புனரமைப்புச் செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பட்டிருப்பு - போரதீவு பிரதான வீதி, மண்டூர் - வெல்லாவெளி பிரதான வீதி, வெல்லாவெளி - திவுலானை வீதி உள்ளிட்ட பல வீதிகள் வெள்ளத்தினால் பலத்த சேதங் களுக்குட்பட்டுள்ளன. இந்நிலையில், அவற்றைச் சீர்செய்து திருத்தியமைக்கும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டுள்ளது.

இதனிடையே வெல்லாவெளி - மண்டூர் பிரதான வீதியின் பெரும்பகுதி கடந்த வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புற்று மக்கள் பிரயாணம் செய்வதில் மிகுந்த அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான வீதிகளை புரனமைக்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவற்றை மிகவிரைவில் பூர்த்தி செய்து மக்கள் இலகுவாகப் போக்குவரத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் வழிசமைத்துக் கொடுக்கப்படுமென வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு காரியாலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சாய்ந்தமருது பிரதேச வடிகான் மூடிகள் உடைந்து போக்குவரத்துக்கு சிரமம்

## புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை



(மாவடிப்பள்ளி)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் வடிகான்களின் மூடிகள் நீண்ட காலமாக உடைந்து காணப்படுவதால் குறித்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள், வாகனச் சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கு வதாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக சாய்ந்தமருது பிரதேசத்தின் உள்ளக வீதிகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்திருந்தது. இதனால் தற்போது இந்த வீதிகளும் வடிகான்களும் உடைந்து காணப்படுகின்றன. மழை அதிகரிக்கும் போது வடிகான்களுக்கு மேல் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடுவதால், குறித்த இந்த வீதியை பயன்படுத்தும்போது வீதி விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளன.

இவ்வீதியில் போக்குவரத்தை மேற்கொள்ளும் வாகனச் சாரதிகள் உட்பட வயோதிபர்கள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பல சிக்கல்களையும் பல சவால்களையும் எதிர்கொண்டு கடந்து செல்லுகின்றனர்.

எனவே, இந்த வீதியின் வடிகான்களை சரியான முறையில் புனரமைப்புச் செய்து தருமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# கடற்றொழிலுக்காகச் சென்று தமிழ்நாட்டில் கரையொதுங்கிய வடக்கு, கிழக்கு மீனவர்களை அழைத்துவர வேண்டும்

## உதுமாலெப்பை எம்.பி. கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை

(அட்டப்பள்ளம் செய்தியாளர்)



அட்டாளைச்சேனை கப்பலடி மீனவர் துறையிலிருந்து கடற்றொழிலுக்காக இயந்திரப் படகில் கடலுக்குச் சென்ற மீனவர்களும் பருத்தித் துறை மீனவர் துறையிலிருந்து கடற்றொழிலுக்காக கடலுக்குச் சென்ற 05 மீனவர்களும் தமிழ் நாட்டில் கடந்த ஜூலை மாதம் 07ஆம் திகதி கரையொதுங்கினர்.

இதில் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த கே.ஆர்.நிஸ்பர் என்பவர் காணாமல் போயுள்ளார். இம்மீனவர்களில் அட்டாளைச்சேனையிலிருந்து சென்ற இர்பான் என்பவர் சென்னை உயர்ஸ்தானிகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மீனவர் துறையிலிருந்து மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற 05 மீனவர்களான அட்டாளைச்சேனையைச் சேர்ந்த எம்.எவ்.முஸ்தகீன், வடமாகாணத்தைச் சேர்ந்த என்.குனபாலசிங்கம், ஏ.இராதாகிருஷ்ணன், எம்.பிரேமசிறி, சின்ன பாலமுனையைச் சேர்ந்த இர்பான் ஆகியோரே ஜூலை மாதம் 07ஆம் திகதி தமிழ்நாடு திருச்சி மாவட்டத்தில் கரையொதுங்கி கொட்டப்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 05 மீனவர்களையும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை விடுத்துள்ளார். இவர்களுக்கிடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை(20) கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது.

சின்ன பாலமுனையைச் சேர்ந்த இர்பான் என்ற மீனவர் மாத்திரம் சென்னை உயர்ஸ் தானிகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அட்டாளைச்சேனையைச் சேர்ந்த மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளதுடன் 04 மீனவர்கள் தமிழ் நாட்டில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இக்கோரிக்கைகளுக்குப் பதிலளித்த கடற்றொழில் அமைச்சர் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 05 மீனவர்களையும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் கடந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மீனவர்களினது படகுகள், இயந்திரங்கள் தொடர்பாக கல்முனை கடற்றொழில் பணிப்பாளரின் அறிக்கை கிடைத்ததும் நஷ்டஈடு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

# பொறுமையைப் பேணி பெருமையை நிராகரித்த நேர்மையான அரசியல்வாதி மர்ஹூம் நஜீப்



முதல் முஸ்லிம் முதலமைச்சர் என்ற பெயருடன் அரசியலில் மிளிர்ந்தவர் மர்ஹூம் நஜீப் ஏ.மஜீத். அன்னாரை இழந்து இன்று (23) ஒரு வருடம் பூர்த்தியாகிறது. சமகால அரசியலில் முஸ்லிம் சமூகம் இழந்த பெரும் ஆளுமை இவராவார். இத்தருணத்தில் பலத்த எதிர்பார்ப்புகளுடன் இவரது இடைவெளியும் நினைவுகூரப்பட வேண்டும்.

தனித்துவ, அடையாள, உரிமை எனப் பிரிக்கும் அரசியல் எல்லாம் புறந்தள்ளப்படும் இன்றைய நிலையில், மர்ஹூம் நஜீப் ஏ.மஜீத்தின் இழப்பு மிகப்பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

1957.01.01 இல் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவில் பிறந்த இவர், தனது 30ஆவது வயதில் அரசியலுக்குள் நுழைய நேர்ந்தது. அவரின் கன்னி அரசியல் முயற்சி தோற்றாலும் இரண்டாவது பிரயத்தனத்தில் கிண்ணியா நகர சபையின் தவிசாளராக 1994 காலப் பகுதியில் தெரிவானார். தந்தையான அப்துல் மஜீத்தின் மறைவு இவருக்கு இப்பொறுப்பை வழங்கியது எனலாம்.

கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளராக ஆரம்பமான மர்ஹூம் நஜீப்பின் அரசியல் பயணம் அரசியலின் உச்சம் வரை உயர்ந்தது. மக்களுக்குப் பணியாற்றுவதில் இவருக்கு பதவிகள் ஒரு பொருட்டாக இருந்ததில்லை. இயல்பாக இவரிடமிருந்த இறைபக்தி, இங்கிதம் மற்றும் இனிமையான போக்குகள் அரசியலுக்கு அடித்தளமிட்டன. அரசியலின் உச்சத்திலான பதவியில் இருந்தபோதும் பொறுமையைப் பேணி, பெருமையை நிராகரித்து நடந்து கொண்டார்.

அரசியல் பயணத்தில் சில தோல்விகளைச் சந்திக்க நேர்ந்தாலும் சிந்தித்து நடந்து கொண்டவர். மக்களுக்கான கடமைகளில் எதைத் தவறவிட்டோம் என்ற எண்ணத்திலேயே இவரது அரசியற் செயற்பாடுகள் அமைந்திருந்தன. தனிப்பட்ட வாழ்விலும் தனக்கென்று ஒரு பக்குவத்தை வகுத்துக் கொண்டவர் மர்ஹூம் நஜீப். இதனால், இவருக்கான நேசம் மற்றும் கௌரவம் மதங்கடந்து மற்றும் சமூகங்களைத் தாண்டி செல்வாக்குப் பெற்றிருந்தது எனலாம்.

முஸ்லிம் தனித்துவ அரசியலுக்கு முகவரி தந்தது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். ஆனால், இதை நிரூபிப்பதற்கான மக்கள் ஆணையை முதன் முதலில் பெற்றவர் மர்ஹூம் நஜீம். கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு கிழக்கு வாழ் சமூகங்களுக்கும் அதிகாரங்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் 2006 இல் உருவாக்கப்பட்டது. ஆனாலும், இரண்டாவது தடவையாக நடத்தப்பட்ட கிழக்கு மாகாண சபைத் தேர்தலில்தான் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார். இறைவன் இச்சந்தர்ப்பத்தை மர்ஹூம் நஜீத்துக்கு முதலில் வழங்கினான். சமூக அடையாளத்துக்கான பிராந்திய அதிகாரம் (முதலமைச்சர்) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில்தான் பெறப்பட்டதையும் இவ்விடத்தில் பதிவிடவேண்டியுள்ளது.

இரண்டாம் தடவையாக 2012 இல் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. அந்நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்பட்டார். இவரது தலைமையிலான அணியே அவருக்கு இப்பதவியை வழங்கியது. இருந்தாலும், கட்சி, இனம் மற்றும் சமூகம் என்ற குறுகிய வட்டத்தில் சிந்திக்கவோ அல்லது செயற்படவோ மர்ஹூம் நஜீப் விரும்பியிருக்கவில்லை.

கிழக்கில் சம அளவில் மற்றும் சமமான அரசியல் பலத்துடன் வாழ்ந்த தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களையும் ஒரே நோக்குடன் நேசித்த பெருந்தகை இவர். மாகாணத்தின் சகல பிரதேசங்களுக்கும் இவரது சேவைகள் சென்றிருந்தன. தேசிய அரசியலில் பேசப்படும் அளவுக்கு அன்னாரின் நிர்வாகத் திறைமைகள் இருந்தன. அதிகாரங்களைப் பகிரும் அரசின் முயற்சிகள் சமூகங்களிடையே பிளவையோ அல்லது பிரச்சினையையோ ஏற்படுத்தாமலிருக்க வேண்டும். இதில், தெளிவாகவும் மற்றும் உறுதியாகவும் இருந்தன இவரது அரசியல் சித்தாந்தங்கள். மொத்தத்தில் சிறந்த அரசியல்வாதி, ஆத்மீகவாதி, மனித நேயன் இன்னும் சிறந்த பண்பாளன் போன்ற பல பண்புகளையுடையவராக மர்ஹூம் நஜீப் திகழ்ந்தார். அன்னாரின் மறுவுலக வாழ்வு வெற்றி பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

- எம்.ஐ.அஹமத் கபீர் -

# கரடியனாறில் அதிக மாத்திரைகளை உட்கொண்ட மாணவி உயிரிழப்பு

(மண்டூர் செய்தியாளர்)


கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கித்துள் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியொருவர் அதிகளவான மாத்திரைகளை உட்கொண்டு மரணமான சம்பவம் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

நாககன்னி கோயில் வீதி, கித்துள் பிரதேசத்தைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் சுஜிதா 18வயதானவரே அதிக மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலை செய்துகொண்ட வராவார்.

க.பொ.த.உயர்தரப் பிரிவில் கல்வி கற்றுவரும் மாணவி, கடந்த சில சினங்களுக்கு முன்னர் தனது தாயாருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக தனது தாயார் பாவிக்கும் உயர் குருதியழுத்த மாத்திரைகளை அதிகமாக உட்கொண்ட நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சடலத்தைப் பார்வையிட்ட மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு பணித்தார். பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏறாவூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யக்கோரி கவனயீர்ப்பு முன்னெடுப்பு






(ஏறாவூர் செய்தியாளர்)

மட்டக்களப்பு - ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தின் ஊழியர்கள், பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யக்கோரி அங்குள்ள ஊழியர்களுக்கான வரவுப் பதிவேட்டில் கையொப்பமிடாது பிரதேச செயலகத்தின் வாயிலை மூடிவைத்து வெள்ளிக்கிழமை (20) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பிரதேச செயலாளர் உட்பட ஊழியர்கள் எவரும் வரவுப்பதிவேட்டில் கையொப்பமிட முடியவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. கவனயீர்ப்புப் போராட்ட வேளையில் பிரதேச செயலகத்தின் சுற்றுமதிலில் நிர்வாக உத்தியோகத்தருக்கெதிராக ''சக ஊழியர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் நிர்வாக உத்தியோகத்தரை இடமாற்றம் செய், சிற்றூழியர்களை தரக்குறைவாக நடத்த வேண்டாம், ஊழியர்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி மன உளைச்சலை ஏற்படுத்த வேண்டாம்'' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஒட்டப்பட்டிருந்தன.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட செயலக அதிகாரிகள் இந்த ஊழியர்கள் சார்பிலான பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளனர். எனினும், நிர்வாக உத்தியோகத்தர் இடமாற்றம் செய்யப்படும்வரை தாம் கடமைக்குத் திரும்புவதில்லையென ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். காலை 10.30 மணிக்கு பின்னர் ஊழியர்கள் அலுவலகத்துக்குள் சென்று வரவுப் பதிவு செய்யாது பொதுமக்களுக்கான சேவையில் ஈடுபட்டதாக அங்குள்ள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# தமிழன் வணிக உலகம்

## Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## வாடிக்கையாளர்களுக்கு வெகுமதியளிக்கும் SLT-MOBITEL இன் பண்டிகைக்கால சலுகைகள்




பண்டிகைக் காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து SLT-MOBITEL 2024 டிசம்பர் மாதத்தில் நிலையான மற்றும் மொபைல் 'பண்டிகைக்கால சலுகைகள்' திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக புதிய மற்றும் ஏற்கனவே காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு விறுவிறுப்பான சலுகைகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பிரத்தியேகமான சலுகைகளினூடாக பண்டிகைக் காலத்தைப் பிரகாசமாக எதிர்பார்ப்பதுடன் லோயல்டியை வெகுமதியளித்து கௌரவிப்பது, வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற பெறுமதியை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்கு தமது நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆதரவளிக்கப்படுகின்றன. அதிகளவு டேட்டா விலைக்கழிவில் சாதனங்கள் மற்றும் புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகள் போன்றன வழங்கப்படும். SLT-MOBITEL இன் பண்டிகைக்கால சலுகைகள் 2024 டிசம்பர் மாதம் முழுவதும் மற்றும் 2025 ஜனவரி மாதத்திலும் kமுன்னெடுக்கப்படும். வாடிக்கையாளர்களுக்கு இந்த சிறந்த பண்டிகைக் கால பக்கேஜ்களுடன் பயன்பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் கோரிய மாற்றத்தை நிறைவேற்றி அசல் நிலையைப் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே காணப்படும் SLT-MOBITEL Fibre மற்றும் ADSL Home வாடிக்கையாளர்களுக்கு விசேட பண்டிகைக் கால ஹெம்பர் FREE 4G LTE இலவச பிற்கொடுப்பனவு இணைப்பாக ரூ. 1000 உடன் மாதாந்தம் 25GB போனஸ் டேட்டா 12 மாதங்களுக்கு வழங்கப்படும். Fibre அல்லது ADSL இணைப்பைக் கொண்டிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு இணையதளத்தினூடாக கோரிக்கையை மேற்கொண்டு இந்த சலுகையைப் பெறலாம். 2024 டிசம்பர் 15முதல் 31வரை இந்தச் சலுகை வழங்கப்படுகின்றது.

SLT-MOBITEL இனால் சகல பிற்கொடுப்பனவு ஹோம் புரோட்பான்ட் வாடிக்கையாளர்களுக்கும் சிறந்த சலுகையாக 25GB இலவச டேட்டா வழங்கப்படுகின்றது. அனைத்தையும் ஒரே bundle இல் கொண்டு ஸ்ட்ரீம் செய்தல், செட் செய்தல் போன்றவற்றுடன் விநோத அம்சங்களுக்கு பயன்படுத்தல் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

டிசம்பர் மாதத்தில் தொழில்நுட்ப டீல்களை வழங்கும் வகையில் பரந்தளவு eTeleshop தெரிவுகளுக்கு சாதன பருவகால ஹெம்பர் சலுகை தெரிவுசெய்துகொள்ளப்பட்ட வாடிக்கையாளர் சாதனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் மீது 50% விலைக்கழிவுடன் வழங்கப்படுகின்றது.

மேலும், ஊக்குவிப்புத் திட்டத்தின்போது வாடிக்கையாளர்களுக்கு eTeleshop ஊடாக MI-FI ரவுட்டர்களுக்கு 20% கழிவைப் பெற்றுக் கொள்ளலாம். அதனூடாக பண்டிகைக் காலத்தில் தமது இணைய அனுபவத்தை இலகுவாக மேம்படுத்திக்கொள்ளும் வசதியை வழங்குகின்றது.

மேலதிக தகவல்கள் மற்றும் விபரங்களுக்கு வாடிக்கையாளர்கள் https://slt.lk/en/promotions எனும் இணையதளத்தைப் பார்க்கவும் அல்லது அருகாமையிலுள்ள SLT-MOBITEL விற்பனை நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## காலிமுகத்திடல் வணிக வளாகத்தில் ஆரம்பிக்கவுள்ள டெய்ன்டீயின் 'ஜிஞ்சர்பிரெட்' உணவகம்




உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உயர்தர மிட்டாய்களுக்குப் பெயர் பெற்ற வர்த்தக நாமமான டெய்ன்டீ, இந்த பண்டிகைக் காலத்தில் தனது தனித்துவமான அனுபவத்தின் வாயிலாக குழந்தைகளையும் அவர்களது குடும்பங்களையும் ஆச்சரியப்படுத்தவும் மகிழ்ச்சியடையச் செய்யவும் திட்டமிட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் முதன்முறையாக காலிமுகத்திடல் வணிக வளாகத்தில் ஆரம்பிக்கவுள்ள தனது ஜிஞ்சர்பிரெட் உணவகத்துக்கு வருகை தருமாறு குழந்தைகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் டெய்ன்டீ அன்புடன் அழைப்பு விடுக்கின்றது.

சன்ஷைன் கன்ஸ்யூமர் லங்கா பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் கீழ் இயங்கும் டெய்ன்டீ, 'நாளைய உலகுக்கு சிறந்த குழந்தைகளைத் தயார்படுத்தும்' அற்புதமான பணியில் ஈடுபட்டுள்ளது. உள்நாட்டில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் உயர்தரமான தின்பண்ட சந்தையில் டெய்ன்டீ நம்பகமான வர்த்தக நாமமாகத் தன்னை நிலைநாட்டிக் கொண்டுள்ளது.

ஜிஞ்சர்பிரெட் என்பது டெய்ன்டீயின் ஏனைய தயாரிப்புகளான ஜூஜுப்ஸ், சீவீஸ், எக்லெயர்ஸ் மற்றும் ஹார்ட்ஸ் சொக்கலேட்டுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான தயாரிப்புகளின் வரிசையில் இணைந்துள்ள ஓர் அசாதாரண உருவாக்கமாகும்.

இந்த ஜிஞ்சர்பிரெட் உணவகத்தில் பரிமாறப்படும் தின்பண்டங்கள் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்வதுடன் அவர்களுக்கான வேடிக்கை, உற்சாகம் மற்றும் உத்வேகம் நிறைந்த சூழலில் பண்டிகைக் கால மாயாஜால அனுபவத்தையும் பெற்றுத் தருகின்றது.

ஜிஞ்சர்பிரெட் உணவகம் முழுவதும் சுகாதாரம், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பின் மிக உயர்ந்த தரத்தை உறுதி செய்வதில் டெய்ன்டீ நிறுவனம் மேலதிக அக்கறை எடுத்துள்ளது. அனைத்து வருகையாளர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான சூழலை உறுதிசெய்யும் வகையில், இலங்கையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் (PHI) சங்கத்தினால் முழு செயற்பாடுகளும் கண்காணிக்கப்பட்டு வழிநடத்தப்படும். குழந்தைகள் இனிமையான சூழலில் சுவையான உணவுகளை ரசித்துச் சுவைக்கும் அதேவேளை, அவர்களின் படைப்பாற்றலை ஆராய்வதற்கும் புதுமைகளைத் தூண்டுவதற்கும் தளமொன்றை வழங்குவதற்கான ஏற்பாட்டையும் டெய்ன்டீ செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 9ஆவது IFFSA விருதுகள் 2024இல் ஒளிர்ந்த NDB ஷரீக்




NDB வங்கியின் இஸ்லாமிய வங்கியியல் பிரிவான NDB ஷரீக், கொழும்பில் அண்மையில் நடைபெற்ற கௌரவமிக்க 9 ஆவது தெற்காசியாவின் இஸ்லாமிய நிதி மன்ற (IFFSA) விருதுகளில் பல பாராட்டுகளைப் பெற்று இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதித் துறையில் தனது தலைமைத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இஸ்லாமிய வங்கிச் சாளரம்/ஆண்டுக்கான அலகு என்ற தங்க விருதையும் இலங்கையின் முன்னணி உணவு உற்பத்தியாளருடன் இணைந்து பணியாற்றியதற்காக ஆண்டின் சிறந்த ஒப்பந்தம் என்ற பிரிவின் கீழ் மற்றொரு தங்க விருதையும் வங்கி பெருமையுடன் வென்றது. இந்த நிறுவன விருதுகளுக்கு மேலதிகமாக, ஃபஹ்மி ரஹீம் ஆண்டுக்கான மிளிரும் நட்சத்திரத்துக்கான வெள்ளி விருதுடன் அங்கீகரிக்கப்பட்டார்.

IFFSA விருதுகள், பிராந்தியத்தில் இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதிக்கான மிகவும் மதிப்புமிக்க தளங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் தெற்காசியா முழுவதும் தொழில்துறையில் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கொண்டாடுகிறது. இந்த ஆண்டுக்கான விருதுகள் அவற்றின் செயற்பாடுகளில் விதிவிலக்கான செயல்திறன், புதுமை, தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றை வெளிப்படுத்திய நிறுவனங்களை முன்னிலைப்படுத்துவதில் கவனம் செலுத்துவதாக அமைந்திருந்தன.

அண்மையில் தனது 10ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய NDB ஷரீக்குக்கு இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது. கடந்த தசாப்தத்தில் NDB ஷரீக், ஷரியாவுக்கு இணங்கக்கூடிய பல்வேறு வகையான நிதியியல் தீர்வுகள் மற்றும் சேவைகளைத் தொடர்ந்து வழங்கியுள்ளது. இது தனிநபர்கள் மற்றும் வர்த்தகங்கள் மீது அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

## பரி.தோமாவின் கல்லூரிக்கு சூரிய மின் கட்டமைப்பை வழங்கிய E.B. Creasy Solar



கல்கிசை, பரி.தோமாவின் கல்லூரிக்கு சூரிய மின் வலுக்கட்டமைப்புத் தீர்வை வழங்கி எதிர்கால கல்விக்கு தூய மின்சாரத்தினூடாக வலுவூட்ட E.B. Creasy Solar முன்வந்திருந்தது. கல்லூரியின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றும் வகையில் சூரிய மின் கட்டமைப்பை E.B. Creasy Solar மாற்றியமைத்திருந்ததுடன், வர்த்தக நாமத்தின் பரிபூரண ஆதரவு மற்றும் தங்கியிருக்கும் திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தியிருந்தது.

146 வருட கால கீர்த்தி நாமத்தின் பின்புலத்தில் இயங்கும் E.B. Creasy Solar இன் தொழில்நுட்பத்தினூடாக உயர் வருமதிகள் மற்றும் நீண்டகால சேமிப்புகள் போன்றன தங்கியிருக்கத்தக்க நம்பிக்கையினூடாக உறுதி செய்யப்படுகின்றன. உயர் பிறப்பாக்கல் காலப்பகுதியில் பாவனையாளருக்கு இந்தத் தீர்வில் முழுமையாகத் தங்கியிருக்க முடியும் என்பதுடன், உற்பத்தி குறைவான காலப்பகுதியில் சேமிப்பு ஒதுக்கங்களிலிருந்து பயன்படுத்திக்கொள்ள முடியும். வலுக் கட்டமைப்பில் பிரத்தியேகமான கட்டண பொறிமுறை உள்ளடங்கியுள்ளதுடன், உரிமையாளருக்கு மேலதிகமாக பிறப்பிக்கப்படும் வலுவை பிரதான மின் வழங்கல் கட்டமைப்புக்கு செலுத்தும் வசதி காணப்படுகின்றது. புதுப்பிக்கத்தக்க வலு பிறப்பாக்கலை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய முதலீடாக இந்த தொழில்நுட்பம் அமைந்துள்ளது. தரம் மற்றும் தங்கியிருக்கும் திறன் ஆகியவற்றுக்காக அறியப்படும் E.B. Creasy Solar இனால் நாடளாவிய ரீதியில் விற்பனைக்கு பிந்திய சேவை உறுதிசெய்யப்படுவதுடன் சகல வாடிக்கையாளர்களும் எங்கிருந்தாலும் தொடர்ச்சியான உதவிச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்கின்றது.

## APIIT பட்டமளிப்பு விழா - 2024



இலங்கையின் முதல் தர வெளிநாட்டு உயர் கல்வி வழங்குனரான ஆசியா பசுபிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (APIIT Sri Lanka) வருடாந்த பட்டமளிப்பு விழா 2024 டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி BMICH பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை சிறப்பிப்பதற்காக பிரதம விருந்தினராக ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டாஃபோர்ட்ஷையர் பல்கலைக்கழகத்தின் (University of Staffordshire) கூட்டு கல்விப் பங்காளித்துவத் தலைவர் திருமதி ஜோஆன் ஓவன்ஸ் க்ரூக்கும் கௌரவ விருந்தினராக இலங்கை நெஸ்லே நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரான பெர்னாட் ஸ்டெபானும் வருகை தந்தனர்.

இப்பட்டமளிப்பு விழாவின் போது 469 மாணவர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டாஃபோர்ட்ஷையர் பல்கலைக்கழகத்தின் வியாபார, தகவல் தொழில்நுட்பம், சட்டம் போன்ற துறைகளில் பட்டம் மற்றும் முதுகலைப் பட்டம் வழங்கப்பெற்றன.

இந்நிகழ்வின் போது மென்பொருள் பொறியியல் (Software Engineering), கணினியியல் (Computer Science), சைபர் பாதுகாப்பு (Cyber Security), சர்வதேச வணிக மேலாண்மை (International Business Management) மற்றும் சட்டம் (Law) போன்ற பட்டப்படிப்புகளுக்கான கௌரவ பட்டங்களும் வணிக நிர்வாகம் (MBA), வணிக கணினி அறிவியல் (MSc Computer Science - Business Computing), மற்றும் சர்வதேச வணிக சட்டம் (LLM - International Business Law) போன்ற பட்டப்படிப்புகளுக்கான முதுகலைப் பட்டங்களும் அளிக்கப்பட்டன.

இவ்விழாவில் 96 மாணவர்கள் முதல் வகுப்பு கௌரவ பட்டங்களையும் 155 மாணவர்கள் இரண்டாம் வகுப்பு (முதலாம் பிரிவு) கௌரவ பட்டங்களையும் 61 மாணவர்கள் அதிசிறந்த முதுகலை பட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

## Unilever Food Solutions வழங்கும் 'எதிர்கால மெனுக்களில் ஈடுபடுங்கள்' நிகழ்வு



2024 ஆம் ஆண்டு உலக சமையல் நிபுணர்கள் தினத்தைக் கொண்டாடும் வகையில், யூனிலிவர் ஸ்ரீலங்காவின் உணவு சேவை வணிகமான Unilever Food Solutions (UFS) (யூனிலிவர் உணவுத் தீர்வுகள்) அண்மையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் முன்னெடுத்த 'Indulge in Future Menus' (எதிர்கால மெனுக்களில் ஈடுபடுங்கள்) நிகழ்வை நடத்தியிருந்தது. இதில் நாடு முழுவதிலுமிருந்து 150க்கும் மேற்பட்ட சமையல் நிபுணர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வானது இரண்டு தெளிவான நோக்கங்களைக் கொண்டிருந்தது. முதலாவதாக, உள்ளூர் சமையல் கலைக்கு உலகளாவிய அறிவையும் புத்தாக்கத்தையும் கொண்டு வருவதன் மூலம் இலங்கையின் சமையல் துறையை மேம்படுத்துவதற்கான UFS இன் அர்ப்பணிப்பை இது வெளிப்படுத்தியது. இரண்டாவதாக, இந்த நிகழ்வு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட Knorr தேங்காய்ப் பால் மா மற்றும் Global UFS வணிக நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 'Future Menus' (எதிர்கால மெனுக்கள்) போக்குகளை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு தளமாக அமைந்தது.

இந்நிகழ்ச்சியில் Unilever Global Innovation Centre இன் Lead Innovation Chef சமையல் நிபுணர் Evert Vermandel சிறப்புரையாற்றினார். 'Future Menus' போக்குகள் பற்றிய அவரது உரையானது உலகளாவிய சமையல் இயக்கங்கள் மற்றும் இலங்கையில் சமையல்காரர்களை ஊக்குவிக்கும் ஆக்கபூர்வமான நுட்பங்கள் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கியது.

தமது சமையல் புத்தாக்க கண்டுபிடிப்பு பயணத்தில் இணையுமாறு சமையல் கலை நிபுணர்களுக்கு யூனிலீவர் Unilever Food Solutions Sri Lanka அழைப்பு விடுக்கிறது. அவர்களை Instagram இல் www.instagram.com/ufsglobal/ ஊடாகவும் Facebook இல் www.facebook.com/@UFSLK/ ஊடாகவும் பின்தொடருங்கள்.

## தனது முதலாவது அதிவேக அனுபவ மையத்தை அறிமுகப்படுத்தும் Hayleys Fentons






Hayleys Fentons Limited நிறுவனம், 223B, நாவல வீதி நுகேகொடையில் அதன் கன்னி அனுபவ மையத்தைத் திறந்துவைத்துள்ளதை பெருமையுடன் அறிவிக்கிறது.

இந்த முன்னணி வசதியளிப்பு மையமானது, சூரிய சக்தி, தகவல் தொடர்பாடல், பாதுகாப்பு மற்றும் தொடர்பாடல், ஒலி-ஒளி ஒருங்கிணைப்பு (AVI), மின்னியல் மற்றும் ஒளியியல், தீ பாதுகாப்புத் தீர்வுகள், வாயுச் சீராக்கம் மற்றும் காற்றோட்டம், நீர்க்குழாய் இணைப்பு மற்றும் எரிவாயு, வசதிகள் முகாமைத்துவம், தடையற்ற மின்சாரம் மற்றும் மின்கல பிரதியீடுகள், கட்டிடக்கலை வரைபடங்கள் மற்றும் முப்பரிமாண காட்சிப்படுத்தல், தொழில்துறை உதிரிப்பாகங்களின் விற்பனை உள்ளிட்ட 12 முக்கிய துறைகளில் நிறுவனத்தின் அதி நவீன தீர்வுகளை வழங்குகின்றது. மேம்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டமைந்துள்ள இந்த அனுபவ மையமானது பங்குபற்றுதலுடனான தயாரிப்பு விளக்கங்கள் பார்வைக்கு மாறும் நிறுவல்கள் உள்ளிட்டவற்றுடன் பயிற்சி, ஒத்துழைப்பு போன்றவை தொடர்பான அறிவைப் பகிர்வதற்கான பிரத்தியேக பகுதிகளையும் கொண்டுள்ளது. இது Hayleys Fentons இன் புத்தாக்கமான சேவைகள் கையாளப்படும் விதத்தை அறியவும் அதில் ஈடுபடவும் வருகைதருவோருக்கு வாய்ப்பளிக்கிறது.

இது தொடர்பான மேலதிக தகவலுக்கு 0112102102 எனும் இலக்கத்துடன் Hayleys Fentons நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது https://www.hayleysfentons.com இணையதளத்தைப் பார்வையிடவும்.

# ரஷ்யாவின் கஷன் நகர அடுக்குமாடி குடியிருப்பு மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்





## தீப்பற்றியெரிந்த கட்டடம்; வீடுகள் பல சேதம்; விமான நிலையத்துக்கு பூட்டு; 02 நாட்கள் மக்கள் வெளியில்வரத் தடை

அமெரிக்காவில் 24 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இரட்டை கோபுரத் தாக்குதலை போன்ற ரஷ்யாவின் கஷன் (Kazan) நகர அடுக்குமாடி குடியிருப்பொன்றின்மீது நேற்றுமுன்தினம் (21) உக்ரைன் தாக்குதல் மேற்கொண்டுள்ளது. இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் எல்லையிலிருந்து சுமார் 1000 கி.மீ. தொலைவிலுள்ள ரஷ்யாவின் டட்டர்ஸ்தான் பிராந்தியத்திலுள்ள கஷன் நகரிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பின் மீது மேற்கொள்ளப்பட்ட ட்ரோன் தாக்குதலில் கட்டடம் தீப்பிடித்து எரிந்துள்ளதுடன் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. பாதுகாப்பு கருதி கஷன் நகர விமான நிலையம் மூடப்பட்டது.

நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன்மீது ரஷ்யா மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் இன்று (23) 1,034ஆவது நாளாகவும் தொடர்கிறது.

உக்ரைனுக்குள் நுழைந்து ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. அதேபோல் உக்ரைனும் ரஷ்யப் படைகளுக்கு பதிலடி கொடுத்து வருகிறது. ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தை உக்ரைன் கைப்பற்றியுள்ளது. இதனால் இரு நாடுளுக்கும் இடையேயான போர் தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில் அ வெள்ளிக்கிழமை (20) உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா பொலிஸ்டிக் ஏவுகணை தாக்குதலை நடத்தியது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். 09 பேர் படுகாயமடைந்தனர். பல அடுக்குமாடி கட்டடங்கள் தீப்பற்றி எரிந்தன. இதனால் கடும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவின் டட்டர்ஸ்தான் பிராந்தியத்தின் கஷன் நகரை குறி வைத்து உக்ரைன் நேற்றுமுன்தினம் (21) ட்ரோன் தாக்குதலை நடத்தியது. இதில் 08 ட்ரோன்கள் குடியிருப்பு பகுதியில் விழுந்ததால் வீடுகள் பலத்த சேதமடைந்தன. அடுக்கு மாடிக் கட்டடங்கள் தீப்பற்றி எரிந்தன. மற்றுமொரு ட்ரோன் தொழிற்சாலை பகுதியில் விழுந்தது. ஒரு ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று டட்டர்ஸ்தான் ஆளுநர் தெரிவித்தார்.

உக்ரைனின் ட்ரோன் தாக்குதலால் கஷன் நகரிலுள்ள விமான நிலையம் பாதுகாப்பு கருதி மூடப்பட்டது. உக்ரைன் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளதால், நேற்றும் நேற்றுமுன்தினமும் டட்டர்ஸ்தான் நகர பகுதிகளில் பொது இடங்களில் மக்கள் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர். டட்டர்ஸ்தானிலுள்ள கசன் நகர் உக்ரைன் எல்லையில் இருந்து 1000 கி.மீ. தொலைவிலுள்ள பகுதியிலுள்ளது.

# இந்தியப் பிரதமர் மோடிக்கு குவைத்தின் உயரிய விருது



குவைத்தின் உயரிய விருதான 'ஓர்டர் ஒவ் முபாரக் அல் கபீர்' இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடி மூன்று நாட்கள் விஜயமாக குவைத்துக்கு நேற்றுமுன்தினம்(21) சென்றார். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று (22) குவைத் அரண்மனையில் பாரம்பரிய முறைப்படி வரவேற்பளிக்கப்பட்டது. மன்னர் ஷேக் மெஷால் அல் அஹமது அல் ஜாபர் அல் ஷாபாவை சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து மோடி விவாதித்தார்.

இந்நிலையில், குவைத் நாட்டின் உயரிய விருதான 'ஓர்டர் ஒவ் முபாரக் அல் கபீர்' விருது வழங்கி அந்நாடு கௌரவித்துள்ளது.

நட்பின் அடிப்படையில் ஒரு நாட்டின் தலைவர்கள், அரச குடும்ப உறுப்பினர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இதற்கு முன்னர், இந்த விருதானது அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன், ஜோர்ஜ் புஷ் மற்றும் பிரிட்டன் மன்னர் சார்ள்ஸ் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்சி கவிழும் அபாயம்

# கனேடியப் பிரதமர் ட்ரூடோ மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்



கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு (Justin Trudeau) எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவுள்ளதாக கூட்டணி கட்சி அறிவித்துள்ளமை அந்நாட்டு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆட்சியில் நீடிப்பதற்கு கூட்டணி கட்சிகளில் ஒன்றான நியூ டெமாக்ரடிக் கட்சி ஆதரவளித்து வருகின்றது. இந்நிலையில், பிரதமர் ட்ரூடோவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர உள்ளதாக நியூ டெமாக்ரடிக் கட்சியின் தலைவரான ஜக்மீத் சிங் அறிவித்துள்ளார். ஏற்கனவே பிரதமர் ட்ரூடோ பதவி விலக வேண்டும் என்று கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

கனடாவில் அடுத்த ஆண்டு ஒக்டோபர் அல்லது அதற்கு முன்பாக தேர்தல் நடத்தப்படவுள்ளது. இந்நிலையில் என்.டி.பி. தலைவர் ஜக்மீத் சிங் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அறிவித்திருக்கின்றார். இதன் காரணமாக தேர்தல் நடைபெற்றாலும் ஆளும் லிபரல் கட்சி படுதோல்வியை சந்திக்க நேரிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமூக ஊடகங்களில் ஜக்மீத் சிங் வெளியிட்டுள்ள கடிதத்தில், 'அடுத்த ஆண்டு ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும். லிபரல் கட்சியினர் மற்றொரு வாய்ப்புக்கு தகுதியற்றவர்கள். எனவே தான் இந்த அரசினை வீழ்த்துவதற்கு என்.டி.பி. வாக்களிக்கும். கனடா மக்களுக்காக பணியாற்றும் அரசுக்காக வாக்களிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் துணை பிரதமர் மற்றும் நிதி அமைச்சரான கிறிஸ்டியா ப்ரீலாண்ட் இராஜினாமா செய்தார். இதன் காரணமாக பிரதமர் ட்ரூடோ பின்னடைவைச் சந்தித்தார். அவருக்கு எதிராக சர்ச்சைகள் எழுந்தன. இந்நிலையில், லிபரல் கட்சியின் 21 எம்.பிக்கள் அவரை இராஜினாமா செய்ய வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்நிலையில், கூட்டணியில் இடம்பெற்றிருந்த என்.டி.பியின் இந்த அறிவிப்பு பிரதமருக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# புயலால் மோதிக்கொண்ட இரு கப்பல்கள்: 04 ஆயிரம் தொன் எண்ணெய் கடலில் கலப்பு




ரஷ்யாவில் 04 ஆயிரம் தொன் மசகு எண்ணெய் கடலில் கலந்துள்ளது.

ரஷ்யாவின் கெர்ச் நீரிணைப்பகுதியில் சென்று கொண்டிருந்த 02 மசகு எண்ணெய்க் கப்பல்களில் சுமார் 09 ஆயிரம் தொன் எரிபொருள் கொண்டு செல்லப்பட்டது. இந்நிலையில், அனபா என்ற பகுதியில் குறித்த கப்பல்கள் சென்றுகொண்டிருந்த போது அப்பகுதியை தாக்கிய புயலால் இரு எண்ணெய்க் கப்பல்களும் ஒன்றுக்கொன்று மோதின.

இந்த விபத்தில் கப்பல்களிலிருந்த மசகு எண்ணெய் கடலில் கசிந்துள்ளது. தற்போதுவரை 04 ஆயிரம் தொன் எண்ணெய் கடலில் கலந்துள்ளது. இந்த எண்ணெய்க் கசிவு காரணமாக அப்பகுதியில் 02 டொல்பின்களும் இறந்து கரையொதுங்கின. மசகு எண்ணெய் தொடர்ந்து கடலில் கலந்து வருவதால் அதை தடுக்க அதிகாரிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜேர்மனி கார் தாக்குதலில் 05 பேர் பலி; 200 பேர் காயம்: 40 பேர் கவலைக்கிடம்

## சவூதி வைத்தியர் கைது





ஜேர்மனியில் கிறிஸ்மஸ் சந்தையில் தாறுமாறாக ஓடிய காரொன்று மோதி 05 பேர் உயிரிழந்துள்ளதுடன் 200இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஜேர்மனி தலைநகர் பெர்லின்நகரிலிருந்து தென் மேற்கே 180 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சக்சோனி-அன்ஹால்ட் மாகாணத்தின் மாக்டேபர்க் நகரில் கிறிஸ்மஸ் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நேற்றுமுன்தினம் (21) உள்ளூர் நேரப்படி இரவு 07 மணியளவில் திடீரென பி.எம்.டபிள்யூ. சொகுசு காரொன்று கிறிஸ்மஸ் சந்தையில் மக்கள் கூட்டத்தின் இடையே அசுர வேகத்தில் தாறுமாறாக ஓடியதுடன் பல கடைகள் மீது மோதி கண்ணாடிகளை நொறுக்கிக்கொண்டு நடைபாதை அருகே நின்றது.

உடனடியாக அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார், துப்பாக்கி முனையில் காரை ஓட்டிய நபரை கைது செய்தனர். இந்த சம்பவத்தில் கார் மோதி 05 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 200இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 40 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடுமென அஞ்சப்படுகிறது.

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபர் சவூதி அரேபியாவைச் சேர்ந்த தலேப் (வயது 50) என்பது தெரியவந்துள்ளது.

இவர் மாக்டேபர்க்கிலிருந்து 40 கி.மீ. தொலைவிலுள்ள பெர்ன்பர்க்கில் மனநல மருத்துவர் ஆவார். கடந்த 2006ஆம் ஆண்டு ஜேர்மனிக்கு குடிபெயர்ந்த இவருக்கு 2016ஆம் ஆண்டு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இவர் வாடகைக்கு பி.எம்.டபிள்யூ. காரை எடுத்து வந்துள்ளார். இந்த சம்பவத்தில் தலேப் மட்டுமே ஈடுபட்டிருப்பதாகவும் இதனால் மேற்கொண்டு எந்த அச்சுறுத்தலும் இல்லையென ஜேர்மனி பொலிஸார் தெரிவித்துள்ளனர். அமெரிக்கா உள்ளிட்ட பல உலக நாடுகள் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

கைதான நபர் வேண்டுமென்றே மக்கள் கூட்டத்தில் காரை ஓட்டியதால், இந்தச் சம்பவம் தீவிரவாதத் தாக்குதலாக இருக்குமா என்ற கோணத்தில் விசாரிக்கப்பட்டு வருவதாக ஜேர்மனி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால் கிறிஸ்மஸ் சந்தைகளில் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு ஜேர்மனி உள்துறை அமைச்சர் நான்சி பியாசர் அறிவுறுத்தியுள்ளார். ஏற்கனவே கிறிஸ்மஸ் சந்தைகள் தீவிரவாதிகளால் குறிவைக்கப்படலாம் என உளவுத்துறை எச்சரித்திருந்த நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

***ஜேர்மனி அதிபரை விமர்சித்த மஸ்க்***

இந்த தாக்குதலுக்கு ஜேர்மனி ஜனாதிபதி ஓல்ப் ஸ்சோல்ஸ் (Olaf Scholz) கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, உலகின் முன்னணி தொழிலதிபரான அமெரிக்காவின் எலான் மஸ்க் தனது எக்ஸ் தளத்தில், ஜேர்மனி அதிபரை ''திறமையற்ற முட்டாள்'' என கடுமையாக விமர்சித்துள்ளார். கைதான சவூதி அரேபிய டாக்டரை குறிப்பிட்டு, ''கொலைக்காரனை நாடு கடத்த மறுப்பவர் கடுமையான தண்டனைக்கு தகுதியானவர்'' எனத் தெரிவித்துள்ளார். மேலும், ஓல்ப் இந்த சம்பவத்துக்கு பொறுப்பேற்று தனது பதவியை இராஜிநாமா செய்யவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# பிரேஸிலில் கோர விபத்து; 38 பயணிகள் உயிரிழப்பு

பிரேஸிலின் தென்கிழக்கே அமைந்துள்ள மினாஸ் ஜெரைஸில் என்ற இடத்தில் பஸ்ஸொன்றுடன் ட்ரெக்டர் மோதிய விபத்தில் 38 பேர் உயிரிழந்துள்ளதுடன் 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதற்கிடையில், விபத்துக்கு காரணமான ட்ரெக் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாவோ பாவ்லோவிலிருந்து பாஹியாவுக்கு 45 பயணிகளுடன் சென்ற பஸ்ஸின் டயர் வெடித்ததால் கட்டுப்பாட்டை இழந்த பஸ் ட்ரெக் மீது மோதியதால் விபத்து சம்பவித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது.

பிரேஸில் விபத்து குறித்து அந்நாட்டு ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா வெளியிட்ட பதிவில், 'மினாஸ் ஜெரைஸின் தியோஃபிலோ ஒட்டோனியில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் மீது யேமன் ரொக்கெட் தாக்குதல்


## 16 பேர் காயம்



இஸ்ரேல் மீது யேமனிலுள்ள ஹவூதி படையினர் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் 16 பேர் காயமடைந்தனர்.

இஸ்ரேலின் டெல் அவிவ் நகரிலுள்ள இராணுவ நிலைகளை குறி வைத்து யேமனிலிருந்து ஹவுதி படையினர் ரொக்கெட்டுகள் மூலம் தாக்குதல் நடத்தினர். இதில் பல வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கி விழுந்ததில் 16இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

# ஹட்டன் பஸ் விபத்து; மூவர் பலி; 50 பேர் காயம்



## படுகாயமடைந்த எழுவர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றம்

**(க.கிஷாந்தன், (எஸ்.கணேசன்)**

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் - கண்டி பிரதான வீதி ஹட்டன் மல்லியப்பு பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 03 பேர் உயிரிழந்துள்ளதுடன், 50 பேர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 07 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் (21) காலை 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் பகுதியிலிருந்து கண்டி நோக்கிப் பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ் வீதியை விட்டு விலகி 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

விபத்தில் சிறுவன் ஒருவனும் வயோதிபர்கள் இருவரும் மொத்தமாக மூவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்தில் பஸ் சாரதி உட்பட 53பேர் காயமடைந்த நிலையில், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் சிலர் கண்டி மற்றும் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர். விபத்தில் காயமடைந்தவர்கள் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

***விபத்தில் உயிரிழந்தோர் விபரம்: காயமடைந்த எழுவர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றம்!***

ஹட்டனிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று ஹட்டன் மல்லியப்பு பகுதியில் நேற்று முன்தினம் (21) வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதில் பயணஞ் செய்தவர்களில் உயிரிழந்த மூவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் கண்டி புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த அப்துல் உவைஸ் (வயது 68), ஹட்டன் தோட்டப்பகுதியைச் சேர்ந்த தேவராஜ் தினேஷ்குமார் (வயது 14), நோர்வூட் மேற்பிரிவு பகுதியைச் சேர்ந்த முத்துராக்கு (வயது 67) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.





பஸ்ஸில் பயணித்த 53 பேரில் 50 காயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மூவர் உயிரிழந்துள்ளதாகவும் இவர்களில் ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மேலும் காயமடைந்த 43 பேர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் டிக்கோயா ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் படுகாயமடைந்த பஸ் சாரதி மற்றும் நடத்துனர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பஸ் சாரதி ஹட்டன் பொலிஸாரின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருவதாகவும் ஹட்டன் பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

பஸ் சாரதி தனது கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக்கொண்டே பஸ்ஸை ஓட்டிச் சென்றதாகவும் அதனாலேயே பஸ்ஸின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் அனுமதிக் கப்பட்ட ஆசனங்களை விட மேலதிகமாக சில ஆசனங்கள் பொருத்தப்பட்டிருந்ததாக ஹட்டன் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டதுடன், விபத்துக்குள்ளான பஸ்ஸின் பாதுகாப்புக் கெமராவின் காட்சிகளை பொலிஸார் ஆராய்ந்துள்ளனர்.

குறித்த தரவுகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், விபத்துக்குள்ளான பஸ் நேற்று முன்தினம்(21) இரவு ஹட்டன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்த 14 வயது சிறுவன் சிறுநீரக நோயாளர் என்பதுடன், மாதாந்த சிகிச்சை பெறுவதற்காக தனது சகோதரியுடன் கண்டிக்குச் சென்றிருந்த போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் உயிரிழந்த சிறுவனின் சகோதரியும் காயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஹட்டன் பொலிஸ் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மத்திய மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபை அதிகாரிகள் இணைந்து வீதி விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கான செயலமர்வொன்றை அண்மையில் ஹட்டன் பிரதேசத்தில் நடத்தியுள்ளனர்.

ஹட்டன் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகரவின் மேற்பார்வையில் ஹட்டன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன தலைமையில் ஹட்டன் வாகனப் பிரிவு அதிகாரிகள் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுமென ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

***ஹட்டன் பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல் – சசிகுமார்***

"ஹட்டன் பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்" - என ஜனநாயக மக்கள் முன்னணியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் சசிகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

''நேற்று முன்தினம் (21) ஹட்டன் மல்லியப்பு சந்திப் பகுதியில் கண்டி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள் ளதுடன் 50 பேர் வரை காயமடைந்துள்ளனர். இந்தச் செய்தி மிகுந்த வருத்தமளிக்கிறது. இதற்கு பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு, வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளவர்கள் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். தற்போது குறித்த பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன்.

குறிப்பாக, பண்டிகைக் காலங்களில் அதிக விபத்துகள் ஏற்படுவதாக பொலிஸ் அறிக்கை கூறுகின்றது. எனவே, மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்''- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடிந்து விழும் நிலையில் இஸ்மாலியா பாடசாலைக் கட்டிடம்

## புனரமைத்துத் தருமாறு பெற்றோர் கோரிக்கை

***(எம். எஸ்.எம்.மஸாஹிம்)***

மாத்தளை நகரமத்தியில் அமைந்துள்ள இஸ்மாலியா முஸ்லிம் வித்தியாலயத்தின் சுவர்களில் பலத்த வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் இதன்காரணமாக மேற்படி சுவர்கள் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய அபாய நிலையில் இருப்பதாகவும் பாடசாலை மாணவர்களின் பெற்றோர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இப்பாடசாலையில் தரம் பதினொன்று வரையிலான வகுப்புகளோடு சுமார் 265 மாணவர்கள் கல்வி பயின்று வருவதாகவும் தெரியவருகிறது.

நாட்டில் தற்போது நிலவுகின்ற கடும் மழை மற்றும் சீரற்ற காலநிலையால் பயங்கர அபாய நிலையில் காணப்படும் இப்பாடசாலைச் சுவர்கள் இடிந்து விழுந்தால் உயிராபத்துகள் ஏற்படக்கூடுமென்பதால் பெற்றோர் இப்பாடசாலையின் ஆபத்தான நிலை பற்றி மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான கமகெதர திசாநாயக்கவும் மத்திய மாகாணக் கல்வி அமைச்சும் மத்திய மாகாண ஆளுநரும் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.



# வடக்கில் இன்னும் ஒருமாத காலத்தினுள் அரிசி விலை நிச்சயம் குறைவடையலாம்

## அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் வடக்கு ஆளுநருக்குமிடையிலான சந்திப்பில் தகவல்





***(பு.கஜிந்தன்)***

''வடக்கு மாகாணத்தில் இன்னும் ஒரு மாதத்துக்குள் அரிசியின் விலை நிச்சயம் குறைவடையும்'' - என வடக்கு மாகாணத்திலுள்ள பிரதான அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், எதிர்வரும் காலங்களில் வடக்கு மாகாணத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களே வடக்கு மாகாணத்தில் விளையும் நெல்லின் பெரும்பகுதியைக் கொள்வனவு செய்வதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படுமென அமைச்சர் இ.சந்திரசேகரனும் ஆளுநர் நா.வேதநாயகனும் தெரிவித்தனர்.

கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அமைச்சர் இ.சந்திரசேகரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இருவரதும் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சனிக்கிழமை மாலை (21) வடக்கு மாகாண அரிசி ஆலை உரிமையாளர்களுடனான சந்திப்பு நடைபெற்றது.

ஆரம்பத்தில் கருத்து வெளியிட்ட ஆளுநர், அரிசியின் விலையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பால் ஏழைகள் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிட்டதுடன், அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரிசியை விற்பனை செய்யக்கூடிய நிலைமை இல்லாதிருப்பதற்கான காரணத்தைக் கேட்டறிந்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையும் நிர்ணய விலையில் விற்பனை செய்யாமல் அவற்றின் லேபல்கள் மாற்றப்பட்டு அதிகரிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில், அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் இ.சந்திரசேகரன், அரிசியை வைத்துக்கொண்டு தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டமை எல்லோருக்கும் தெரியும். அவ்வாறான நிலைமை தொடரக்கூடாது என்பதில் அரசாங்கம் கவனத்துடன் இருக்கின்றது.

அரிசி ஆலை உரிமையாளர்களான உங்களை நஷ்டத்தில் வீழ்த்துவதையோ மக்களைக் கஷ்டத்தில் வீழ்த்துவதையோ விரும்பவில்லை என அவர் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கம் எதிர்காலத்தில் மூன்று இடங்களில் புதிதாக அரிசி ஆலையை அமைப்பதற்கு திட்டமிடுவதாகவும் குறிப்பிட்ட அவர், கடந்த காலங்களில் நெல்லைக் கொள்வனவு செய்தபோது நீங்கள் அதை அரிசியாக்கும்போது நிர்ணயமாகும் விலையைவிட தற்போது அதிக விலைக்கே விற்பனை செய்வதாகவும் தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்களைப் பழிவாங்குவதாக நினைக்க வேண்டாம். அதிகமான ஏழைகள் வாழும் மாகாணம் எமது மாகாணம் என்பதைக் கவனத்திலெடுத்து சமூகப்பொறுப்புடன் செயற்படுமாறும் வலியுறுத்தினார்.

இங்கு கருத்து வெளியிட்ட மூத்த விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர், வடக்கு மாகாணத்தின் தேவையை விட இரண்டரை மடங்கு அதிக நெல் உற்பத்தி செய்யப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கருத்துவெளியிட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள், வடக்கு மாகாண விவசாயிகளின் நெல்லை வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் பியர் உற்பத்திக்காகவும் கொள்வனவு செய்கின்றார்கள். அத்துடன், இங்கிருந்து அவர்கள் நெல்லைக் கொள்வனவுசெய்து கொண்டுசென்று திருப்பி எங்களுக்கு அதிக விலைக்கு வழங்குகின்றனர்.

எங்களுக்கு வங்கிகளூடாக அதிகளவான கடன் வசதிகள் கிடைப்பதில்லை. ஆனால், அவர்களுக்கு கிடைக்கின்றது. இங்கு போதியளவு களஞ்சிய வசதிகள் இருக்கும் நிலையில், வங்கிகள் கடன் எல்லையை அதிகரித்து வழங்கினால் எம்மால் விவசாயிகளிடமிருந்து அதிகளவு நெல்லைக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்குமெனக் குறிப்பிட்டனர்.

மேலும், நெல் அறுவடைக்கு முன்னராகவே நெல்லுக்கான மற்றும் அரிசிக்கான விலையை நிர்ணயம் செய்வதனூடாக இவ்வாறான நெருக்கடி நிலைமையைத் தவிர்க்க முடியுமெனவும் குறிப்பிட்டனர்.

நெல் மற்றும் அரிசி விலை நிர்ணயம் தொடர்பில் துறைசார் அமைச்சருடன் கலந்துரையாடுவதாக அமைச்சர் குறிப்பிட்டதுடன் வங்கிகளுடன் கலந்துரையாடுவதாக ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் அரிசி மற்றும் ஏற்கனவே ஆலைகளின் இருப்பிலுள்ள அரிசிகள் தற்போதைய நிலைமைக்குப் போதுமான அளவில் இருப்பதாகவும் விலை அதிகரிப்பு இனி இருக்காதெனவும் குறிப்பிட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள், இன்னும் ஒரு மாதத்தில் அரிசியின் விலை 200 ரூபாவை விட நிச்சயம் குறைவடையுமெனக் குறிப்பிட்டனர்.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலராக பதில் கடமையாற்றும் திருமதி எழிலரசி அன்ரன்யோகநாயகம், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.சிறிமோகனன், வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் திரேஸ்குமார், வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்றுறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் செயலர் பொ.வாகீசன், வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ந.திருலிங்கநாதன், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி எஸ்.குகதாஸ், நெல் கொள்வனவு சபையினர், நுகர்வோர் அதிகார சபையினர் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறுபான்மையினத்தவரின் பங்களிப்பு ஜனாதிபதி செயலணிகளில் அவசியம்

## ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் வலியுறுத்து

***(பு.கஜிந்தன்)***



'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளமையை வரவேற்றுள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இவ்வாறான செயலணிகளில் இலங்கையின் பல்லினத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியில் சிறுபான்மையின மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமையை சுட்டிக்காட்டி, ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகத்தினால் இந்த விடயம் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள 18 பேர் அடங்கிய இக்குழுவில் சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாரும் உள்ளடக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

# எல்லைத்தாண்டிய இந்திய மீனவர்கள் பிரச்சினையில் மனிதாபிமானம் என்ற பேச்சுக்கே இடமிருக்கக்கூடாது

## வடமாகாண கடலோடிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அண்ணாமலை தெரிவிப்பு

***(பு.கஜிந்தன்)***




இந்தியாவிலிருந்து வந்து இலங்கை கடற்பரப்புக்குள் எல்லைத்தாண்டிய மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் விவகாரத்தில் மனிதாபிமானம் என்ற பேச்சே இருக்கக்கூடாதென வடமாகாண கடலோடிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளரும் இணைப்பாளருமான காத்தலிங்கம் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை வடமராட்சியில் தனது கடற்றொழில் வாடியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அண்மையில் இந்தியாவுக்குச் சென்ற எமது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவில் பிரதமர் மோடியைச் சந்தித்தபோது எல்லைத்தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் விடயம் மனிதாபிமானத்துடன் அணுகப்படும் எனத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, எமது மீனவர்கள் எல்லைத்தாண்டி இயந்திரக் கோளாறு காரணமாக சென்றதற்கே மியன்மாரில் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு ரூபா 05 இலட்சம் குற்றப்பணமும் கடூழியச் சிறையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இலங்கையில் இறைமையுள்ள எமது கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபடும் எவராக இருந்தாலும் அவர்களுக்கும் இவ்வாறான தண்டனைகள் வழங்கப்படவேண்டுமென்றும் எல்லைத்தாண்டி வந்து இலங்கை கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த கடற்படை இந்த நாட்டுக்குத் தேவைதானா எனவும் கேள்வியெழுப்பினார்.





***மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் ஒன்றுகூடலும் எதிர்கால நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலும் சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் சபை மண்டபத்தில் நடைபெற்றன. அதன்பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தின் தலைவர் தேவராசா தீபன், எதிர்வரும் காலத்தில் மாவீரர் நினைவேந்தல்களைத் தாம் பொறுப்பேற்று செய்வதாகவும் அதற்கேற்றவாறு தாம் நிர்வாகங்களைத் தெரிவு செய்து முன்னாள் போராளிகள் தலைமை தாங்கிய மாவீரர் நினைவேந்தலை நடத்துவதாகவும் அதற்கு முன்னாயத்தமான கூட்டமாக இது நடைபெற்றதாகவும் தெரிவித்தார்.***

# இந்திய கிரிக்கெட் வீரருக்கு பிடியாணை



இந்திய கிரிக்கெட் வீரர் ராபின் உத்தப்பாவுக்கு வருங்கால வைப்பு நிதி மோசடி குற்றச்சாட்டு காரணமாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உத்தப்பா பெங்களூரைச் சேர்ந்த சென்டாரஸ் லைஃப்ஸ்டைல் பிராண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநராக உள்ளார். இந்த நிறுவனம் தனது ஊழியர்களிடம் வசூலித்த சுமார் ரூ.24 இலட்சம் ரூபாவை தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதியில் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேலும், ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து பிடித்த தொகையை உத்தப்பாவின் நிறுவனம் வருங்கால வைப்பு நிதி ஆணையத்தில் செலுத்தாமல் மோசடி செய்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக புகார் அளிக்கப்பட்டதையடுத்து, உத்தப்பாவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது டுபாயில் உள்ள உத்தப்பா, 27ஆம் திகதிக்குள் பணத்தை செலுத்த வேண்டும் எனவும் அவ்வாறு செலுத்தத் தவறினால் கைது செய்யப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெஸ்ட் இண்டீஸை அதன் சொந்த மண்ணில் வெள்ளையடிப்புச் செய்த பங்களாதேஷ்




வெஸ்ட் இண்டீஸ் அணியுடனான 03 போட்டிகளை கொண்ட ரி20 சர்வதேச தொடரை எதிரணியின் மண்ணில் வைத்து 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி பங்களாதேஷ் அணி சாதனை படைத்துள்ளது.

பங்களாதேஷ் அணி வெஸ்ட் இண்டீஸில் பயணம் செய்து 02 டெஸ்ட், 03 ஒருநாள் மற்றும் 03 ரி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடியது. முதலில் நடந்த டெஸ்ட் தொடர் 1-1 என சமனில் முடிந்தது. ஒருநாள் தொடரை 3-0 என வெஸ்ட் இண்டீஸ் கைப்பற்றியது.

இதையடுத்து, நடந்த ரி20 தொடரின் முதல் இரு ஆட்டங்களில் பங்களாதேஷ் வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றியது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ரி20 போட்டி அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பங்களாதேஷ் 20 ஓவரில் 07 விக்கெட்டுக்கு 189 ரன்கள் எடுத்தது. 190 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி, பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. இறுதியில், வெஸ்ட் இண்டீஸ் அணி 16.4 ஓவரில் 109 ரன்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. ஆட்ட நாயகன் விருது ஜாகிர் அலிக்கும் தொடர் நாயகன் விருது மெஹிதி ஹசனுக்கும் வழங்கப்பட்டது.

## விளையாட்டுத் துளிகள்

ஸிம்பாப்வேவுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் நடுவரின் முடிவில் மறுப்பு தெரிவித்ததற்காக ஆப்கானிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் பசல்ஹக் பரூக்கிக்கு போட்டி கட்டணத்தில் 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★

மும்பை இந்தியன்ஸ் அணியின் புதிய களத்தடுப்பு பயிற்சியாளராக இங்கிலாந்து முன்னாள் வீரர் கார்ல் ஹாப்கின்சன் (43 வயது) ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மும்பை இந்தியன்ஸ் அணியுடன் 07 ஆண்டுகள் தொடர்ச்சியாக பணியாற்றி வந்த ஜேம்ஸ் பம்மெண்ட்டின் பயணம் முடிவுக்கு வருகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★

தேசிய ஒலிம்பிக் பேரவையின் நிதி ஒதுக்கீட்டை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்த சர்வதேச ஒலிம்பிக் பேரவை முடிவு செய்துள்ளது. இருப்பினும், சர்வதேச ஒலிம்பிக் குழுவின் புலமைப்பரிசில்களைப் பெற்ற இலங்கையின் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட மாட்டாது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★

பாகிஸ்தானுடனான 2ஆவது ஒருநாள் ஆட்டத்தின்போது ஐ.சி.சி. நடத்தை விதிகளை மீறியதாக தென்னாபிரிக்க வீரர் ஹென்ரிச் கிளாசனுக்கு ஐ.சி.சி. அபராதம் விதித்துள்ளது. 97 ரன்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்த ஹென்ரிச் கிளாசன் விரக்தியில் ஸ்டம்புகளை காலால் எட்டி உதைத்தார். இதன் காரணமாக கிளாசனுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 15 சதவீதம் அபராதம் விதிப்பதுடன், ஒரு தகுதி இழப்பீட்டு புள்ளியையும் வழங்குவதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.



இலங்கை கிரிக்கெட்டின் புதிய முயற்சியாக பல்லேகலையில் நடைபெற்ற முதலாவது லங்கா ரி10 சுப்பர் லீக் தொடரின் இறுதிப்போட்டியில் டேவிட் வீஸி தலைமையிலான ஜவ்னா டைட்டன்ஸ் அணியை வீழ்த்தி தசுன் சானக்க தலைமையிலான ஹம்பாந்தோட்டை பங்ளா டைகர்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

# இலங்கை கிரிக்கெட்டின் யாப்பில் முக்கிய மாற்றங்கள்



இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாக பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இதன் போது இலங்கை கிரிக்கெட்டின் யாப்பில் புதிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.


புதிய யாப்பு மாற்றங்களில் முக்கிய விடயமாக, தீர்மானங்களின்போது வாக்களிக்கும் உரிமை 147 உறுப்பினர்களில் இருந்து 60 உறுப்பினர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நிதி முகாமை சார்ந்த விடயங்களில் வெளிப்படைத்தன்மையினை பேணுவதனை உறுதிப்படுத்துவதும் புதிய யாப்பில் உள்ளடக்கப்பட்ட மற்றைய முக்கிய விடயமாக மாறுகின்றது.

யாப்பு மாற்றங்களுக்கு மேலதிகமாக 2025ஆம் ஆண்டுக்கான இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாக தேர்தல்கள் குழுவினை நியமிக்கும் நிகழ்வும் பொதுக்கூட்டத்தின் போது இடம்பெற்றுள்ளது. அந்தவகையில் ஓய்வு பெற்ற நீதிபதி மலானி குணரட்ன தலைமையிலான நான்கு பேர் அடங்கிய தேர்தல் குழு 2025ஆம் ஆண்டுக்கான இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகத் தேர்தல்களை முகாமை செய்யவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் நடைபெறவுள்ள உலக தடகள போட்டி

அடுத்த உலக தடகள போட்டி இந்தியாவில் நடைபெறவுள்ளது என்று இந்திய தடகள சம்மேளனம் (ஏ.எஃப்.ஐ) அறிவித்துள்ளது.

இதுகுறித்து இந்திய தடகள சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது, இந்தப் போட்டியானது ஒடிசா மாநிலத் தலைநகர் புவனேஸ்வரில் அடுத்த ஆண்டு ஒகஸ்ட் 10ஆம் திகதி நடைபெறும். உலக தடகள போட்டியாக இது இருந்தாலும் இந்தியாவில் நடைபெறும் பிரிவானது வெண்கலப் பதக்கங்களுக்கான போட்டியாக மட்டுமே இருக்கும்.




# முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்ற ரியல் மெட்ரிட்

கட்டாரில் நடைபெற்ற பீபா இன்டர் கொன்டினென்டல் உதைபந்து கிண்ணத் தொடரில் ரியல் மெட்ரிட் அணி முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் ரியல் மெட்ரிட், மெக்சிகோவின் பச்சுகா அணிகள் மோதின. ஆட்டத்தின் 37ஆவது நிமிடத்தில் ரியல் மெட்ரிட் அணியின் எம்பாப்பே ஒரு கோல் அடித்தார். முதல் பாதி முடிவில் ரியல் மெட்ரிட் அணி 1-0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியின் 53ஆவது நிமிடத்தில் ரோட்ரிகோ ஒரு கோலும் 84ஆவது நிமிடத்தில் வினிசியஸ் ஜூனியர் (பெனால்டி) ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். பச்சுகா அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. இறுதியில், ரியல் மெட்ரிட் அணி 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று, இத்தொடரில் முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

# வெற்றிகரமாக நிறைவடைந்த DSI சுப்பர்ஸ்போர்ட் பாடசாலை கரப்பந்து சம்பியன்ஷிப் 2024




இலங்கை முழுவதிலும் உள்ள இளம் விளையாட்டு வீரர்களிடையே காணப்படும் கரப்பந்தாட்ட விளையாட்டின் மீதான அபாரமான திறமையயும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கரப்பந்து சம்மேளனம், பாடசாலை கரப்பந்து சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் 22ஆவது டி.எஸ்.ஐ. சுப்பர்ஸ்போர்ட் பாடசாலை கரப்பந்து சம்பியன்ஷிப் தொடர் அண்மையில் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

11 வயதுக்குட்பட்ட மற்றும் 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் வெற்றிபெற்ற நாத்தாண்டிய, தம்மிஸ்ஸர தேசிய பாடசாலையானது போட்டியின் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பெண்கள் பிரிவில் 15 வயதுக்குட்பட்ட ஹங்கம, ஹ.விஜயபால தேசிய பாடசாலை வெற்றிபெற்ற அதே வேளையில், ஆண்கள் பிரிவில் தம்மிஸ்ஸர தேசியப் பாடசாலை பட்டத்தை வென்றது.

17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில், கிரிஉல்ல, விக்ரமஷீல தேசிய பாடசாலை கிண்ணத்தைக் கைப்பற்றியது. தம்மிஸ்ஸர தேசிய பாடசாலை மீண்டும் ஆண்களுக்கான பட்டத்தை வென்றது. 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பட்டத்தை ருவன்வெல்ல, கா/தெஹி/ராஜசிங்க மத்திய கல்லூரியும் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் ஹங்கம விஜயபா தேசிய பாடசாலையும் வெற்றி பெற்றன.

சிறந்த வீரராக (ஆண்கள்) கா/தெஹி/ராஜசிங்க மத்திய கல்லூரியின் கே.எஸ்.எம். இதுரங்க மற்றும் சிறந்த வீராங்கனையாக (பெண்கள்) விக்ரமஷீல தேசிய பாடசாலையின் கே.எம். ஹர்ஷனி நிசன்சலா ஆகியோர் தனிப்பட்ட திறமைக்காக கௌரவிக்கப்பட்டனர்.

## பாடகர் - எழுத்தாளர் - ஓவியரென பல்துறையில் கலக்கும் கிரிக்கெட் வீரர்



ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஹென்றி ஒலோங்கா, அடிலெய்டில் நடைபெற்ற இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் போட்டியின் போது ஓவியம் வரைந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

48 வயதான ஒலோங்கா ஸிம்பாப்வே அணிக்காக 80க்கும் மேற்பட்ட சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ளார். இருப்பினும், 25 ஆண்டுகளுக்கும் மேலாக, ஒலோங்காவின் வாழ்க்கை யாரும் எதிர்பார்க்காத வகையில் அமைந்துள்ளது.

2019ஆம் ஆண்டில், த வொய்ஸ் அவுஸ்திரேலியா பாடல் போட்டியில் நடுவர்களைக் கவர்ந்த ஒலோங்கா வைரலானார். இப்போது, ஒலோங்கா, பகுதி நேர ஓவியராகவும் சாதாரண பயிற்சியாளராகவும் நடுவராகவும் தனது வாழ்க்கையை நடத்தி வருகிறார்.

ஒலோங்கா கடைசியாக 2003 உலகக்கிண்ணத்தில் ஸிம்பாப்வேக்காக விளையாடினார். அதன் பிறகு ஸிம்பாப்வேயில் நடந்த அரசியல் காரணங்களால் அவர் அணியில் இருந்து விலக நேரிட்டது.

# ஸிம்பாப்வேயுடனான ஒருநாள் தொடரும் ஆப்கான் வசம்



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி ஸிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 03 ரி20, 03 ஒருநாள் மற்றும் 02 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி20 தொடரை 2-1 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது.

இதையடுத்து, ஒருநாள் தொடர் நடைபெற்றது. இதில் முதல் ஆட்டம் மழையால் மண்ணான நிலையில் 2ஆவது போட்டியில் ஆப்கானிஸ்தான் 232 ரன்களினால் அபார வெற்றியீட்டியது. இந்நிலையில் இறுதி ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் (21) நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே அணி ஆரம்பம் முதல் ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து இறுதியில் 30.1 ஓவர்களில் 127 ரன்களுக்கு சுருண்டது. 128 ரன்கள் இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி 26.5 ஓவர்களில் 02 விக்கெட் இழப்புக்கு 131 ரன்கள் எடுத்து 08 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

ஆப்கானிஸ்தான் அணியில் சிறப்பாக பந்துவீசிய கசன்பர் 05 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்டநாயகனாகவும் சித்தீகுல்லாஹ் அத்தால் தொடர் நாயகனாகவும் தெரிவானார். அடுத்து இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 26ஆம் திகதி பொக்சிங் டே டெஸ்ட் போட்டியாக நடைபெறுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7